4236

திருப்புகழமிர்தம்

கர மாத வெளியீடு புரட்ட

ஆசிரியர்:
கிருபானந்தவாரி

விலை 0—3-

முக்கிய அறிவிப்பு

இவ்வாண்டு சித்திரை முதல் புரட்டாசிவரை வெளி வந்த திருப்புகழமிர்த இதழ்கள் கைவசமில்லை. ஆகவே இனிச் சந்தா தாரராகச் சேரும் அன்பர்கள் கர ஐப்பசி முதல் நந்தன பங்குனி வரையுள்ள $1\frac{1}{2}$ ஆண்டுக்குச் சந்தாவாக ரூ 3-0-0 செலுத்தினால் தான் ஏற்றுக்கொள்ளப்படும். அவர்களுக்கு கர ஐப்பசி முதல் நந்தன பங்குனி முடிய திருப்புகழமிர்தம் அனுப்பிவைக்கப்படும்.

மானேஜர், திருப்புகழமிர்தம்.

திருப்பூர் B. S. கலிகராஜு செட்டியார் அவர்களால் வெளியிடப்பட்ட படங்கள்—20X14 சைஸ், 12கலர். பூஜைக்கும் தியானத்துக்கும் மிகச்சிறந்த அழகிய படம். 1. ஷட்கோண ஷண்முகப் பிரகாசம் 6 படைவீடுகள் உள்ளது. 2. சரவணபவ எழுத்துப்படம் (அருணகிரிநாதர் செய்யுளை சித்திரரூபமாக அமைத்தது) ஷை படங்கள் சித்திரவிளக்க புத்தகங்களுடன் கொடுக்கப்படும். படம் 1க்கு விலை ரூ 1-8-0 தபால்செலவு 1காபி முதல் 4காபி வரை 0-8-0 பர்மா மலேயா முதலிய நாடுகளிலுள்ளோர் முன்பணமனுப்பவேண்டும். வியாபாரிகட்கும், ஏஜண்டுகட்கும், தகுந்த கமிஷன் தரப்படும். முழு விலாசத்துடன் எழுதிப்பெறவும். முழுவிற்பனை உரிமையாளர்: பால்தண்டபாணி பிக்சர் ஹவுஸ், குமரன் வீதி, திருப்பூர் S.Ry.

வரப்பெற்றோம்

1 சிவானந்த மஞ்சரி, தொகுத்தவர் டாக்டர் V. S. மணி. விலை ரூ 1-8-0, 2. பயமின்றி வாழுமுறை, ஸ்ரீ சுவாமி சிவானந்தர் எழுதியது. மொழிபெயர்த்தவர் A.N சுந்தரமூர்த்தி-விலை ரூ 2-0-0. 3. சிவானந்த விஜயம், இயற்றியவர், ஸ்ரீ சு. குருசாமி ஜெமினி, மதராஸ். விலை ரூ 2-0-0 ஷை மூன்று புத்தகங்களும் கிடைக்குமிடம்: சிவானந்த புத்தகப் பதிப்புக் கழகம், ஆனந்த குடீரம், ரிஷிகேசம்.

முருகன் அக்ஷரமாலை—ஆசிரியர் திரு.நா. பிச்சுமணி—தமிழாசான், தென்னிந்திய கல்விக்கழக உயர்தரக் கல்லூரி, மாதுங்கா, பம்பாய்.

மணிமொழிகள் அறுபது (இரண்டாவது பதிப்பு)

ஆசிரியர் திருமுருக கிருபானந்தவாரி அவர்கள் ஆய்ந்தெழுதியது. வர்ணப்பட மேலட்டையுடன் கூடியது. விலை அணா நான்குதான். ஆறு புததகங்கள் வரை தபாற் செலவு ஆறணா. ஒருபுத்தகத்திற்கு தபாற் செலவு 0-5-6.

சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்களில் பலர் தமக்குப் பத்திரிகைகள் கிடைக்கவில்லையென்று அடிக்கடி எழுதுகிறார்கள். காரியாலயத்தில் சரிபார்த்தே இதழ்கள் அனுப்பப் பெறுவதால் காரியாலயத்திற்கு எழுதிப் பயனில்லை. சம்பந்தப்பட்ட தபால் அதிகாரிகளுக்கே எழுதிக்கொள்ள வேண்டும்.

மானேஜர், திருப்புகழமிர்தம்.

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 16 | கர ஆண்டு புரட்டாசித் திங்கள் செப்டம்பர்-1951 | இதழ் 6

திருப்புகழ்

பொது

இருநோய்ம லத்தைசிவ வொளியால்மி ரட்டி யெனை
இனிதாவ ழைத்தெனது முடிமேலே-
இணைதாள ளித்துனது மயில்மேலி ருத்தியொளி
ரியல்வேல ளித்துமகி ழிருவோரும்;

ஒருவாகெ னக்கயிலை யிறையோன ளித்தருளு
மொளிர்வேத கற்பகந லிளையோனே-
ஒளிர்மாம றைத்தொகுதி சுரர்பார்து தித்தருள
உபதேசி கப்பதமு மருள்வாயே;

கருநோய றுத்தெனது மிடிதூள்ப டுத்திவிடு
கரிமாமு கக்கடவு ளடியார்கள்-
கருதாவ கைக்குவர மருள்ஞான தொப்பை மகிழ்
கருணாக டப்பமல ரணிவோனே;

திருமால ளித்தருளு மொருஞான பத்தினியை
திகழ்மார்பு றத்தழுவு மயில்வேலா-
சிலைதூளெ ழுப்பிகவ டவுணோரை வெட்டிசுரர்
சிறைமீள விட்டபுகழ் பெருமாளே.

பதவுரை

எனது கருநோய் அறுத்து— அடியேனுடைய கருவில் தங்கும் பிறவி நோயைக் களைந்து, மிடிதூள் படுத்திவிடு — அவாவாகிய வறுமையைத் தூளாக்கிய, கரிமாமுகக்கடவுள் - பெருமை நிறைந்த யானைமுகக் கடவுளும், அடியார்கள் கருதா வகைக்கு வரம் அருள்—அடியவர்கள் நினைக்கு முன்னரேயே வரந்தருபவரும், ஞான தொப்பை — அறிவின் பெருக்கையே வயிருகக் கொண்டவரும் ஆகிய விநாயகப் பெருமான்— மகிழ்—மகிழ்கின்ற, கருணை — கருணைக்கடவுளே! கடப்பமலர் அணிவோனே—கடப்பமலர்மாலையை அணிகின்றவரே! திருமால் அளித்து அருளும் - நாராயண மூர்த்தி தமது திருக்கண்ணில் தந்தருளிய, ஒரு ஞான பத்தினியை — ஒப்பற்ற திருஞான மங்கையாகிய வள்ளி பிராட்டியாரை, திகழ் மார்பு உறத்தழுவும் - சிறந்த திருமார்பில் பொருந்தத் தழுவிக்கொள்ளும், அயில் வேலா—கூர்மை பொருந்திய வேலாயுதத்தையுடையவரே! சிலை தூள் எழுப்பி - மலையைப் பொடி செய்து, கவடு அவுணரை வெட்டி — கபடகுணம் உடைய அரக்கர்களைத் துணித்து, சுரர் சிறை மீள விட்ட - தேவர்கள் சிறையினின்று மீளுமாறு அருளிய, புகழ் பெருமாளே — புகழ்மிக்க பெருமையின் மிக்கவரே! இரு நோய் - இறப்பு பிறப்பு என்ற இரண்டு நோய்களையும், மலத்தை — ஆணவமலத்தையும், சிவவொளியால் மிரட்டி — சிவப்ரகாசத்தினல் விலக்கி, எனை இனிதா அழைத்து — அடியேனை இனிமையாக அழைத்து, எனது முடி மேலே இணைதாள் அளித்து — அடியேனுடைய சென்னியில் உமது இரண்டு திருவடிகளையும் சூட்டி, உனது மயில் மேல் இருத்தி - தேவரீருடைய மயில்வாகனத்தின் மீது அடியேனை இருக்குமாறு செய்து, ஒளிர் இயல் வேல் அளித்து — ஞான ஒளி இயல்பாக வீசும் வேலாயுதத்தைத் தந்து, இருவோரும் ஒருவாகு என - தேவரீரும் அடியேனும் ஒன்றுபட்டு ஒரு தன்மை என்று, ஒளிர் மாமறை தொகுதி — அறிவொளி வீசுகின்ற சிறந்த வேதங்களும், சுரர் — தேவர்களும், பார் துதித்து அருள — மண்ணுலகமும் துதித்து அருளுமாறு, கயிலை இறையோன் அளித்து அருளும் - கயிலாயபதி பெற்றருளிய, ஒளிர்வேத கற்பக நல் இளையோனே—ஒளி செய்கின்ற வேதம்புகழும் கற்பகமனைய நல்ல இளம்பூரணரே! உபதேசிகப் பதமும் அருள்வாயே - உபதேசித்து அதனல் நற்பதத்தை அருள்புரிவீர்.

பொழிப்புரை

அடியேனுடைய கருவில் தங்கும் பிறவிப்பிணியை அறுத்து, அவாவென்ற வறுமையைப் பொடிசெய்து அருளிய, பெருமையுடைய யானைமுகக் கடவுளும், அடியவர்கள் இதுவேண்டும் என்று நினைப்பதற்கு முன்னரேயே வேண்டிய வரத்தைத் தருபவரும், ஞானப்பெருக்கமாகிய திருவயிற்றை

யுடையவருமாகிய விநாயகமூர்த்தி மகிழ்கின்ற கருணைமூர்த்தியே! கடப்பமலர்மாலையைத் தரிக்கின்றவரே! திருமால் பெற்ற ஞானமங்கையாகிய வள்ளியம்மையாரை அழகிய திருமார்பில் தழுவுகின்ற கூரிய வேலாயுதக்கடவுளே! கிரவுஞ்ச மலையைத் தூள் செய்து, கபடகுணம் படைத்த அரக்கர்களைத் துணித்து, தேவர் சிறை மீட்ட புகழ் மிக்க பெருமிதம் உடையவரே! இறப்பு பிறப்பு என்ற இருநோய்களையும் ஆணவமலத்தையும் நீக்கி, அடியேனை இனிது அழைத்து, என் சென்னி மீது தேவரீரது இரண்டு திருவடித் தாமரைகளைச் சூட்டி, உமது மயில்வாகனத்தின் மீது இருத்தி, அறிவு ஒளி இயல் பாக வீசும் வேலாயுதத்தைத் தந்து, தேவரீரும் அடியேனும் ஒன்றுபட்டு ஒரு தன்மையதாக நின்ற திறத்தை, அறிவுச் சுடரை யுடைய வேதங்களும் தேவர்களும் நரர்களும் துதித் தருள, கயிலைமேவும் கண்ணுதற் கடவுள் பெற்ற வேத வித்தக ராகிய கற்பகம் போன்ற நல்ல இளம்பூரணரே! உபதேசித்துத் திருவருள் புரிவீர்.

விரிவுரை

இருநோய்:—

இருநோய்—பிறப்பு இறப்பு என்ற இருவகை நோய்கள்: அன்றி, இரு என்ற சொல்லுக்கு பெரிய என்று பொருள் செய்து பெரிய நோயாகிய பிறவி நோய் எனினும் அமையும்.

பிறவியைப் பிணி யென்று கூறுவது மரபு. "பவரோக வயித்திய நாதப் பெருமாளே" என்ற திருப்புகழடியாலும் உணர்க.

> உடம்புக்குத் தொடர்ந்து வரும் நோய் பசி.
> உள்ளத்திற்குத் தொடர்ந்து வரும் நோய் காமம்.
> உயிர்க்குத் தொடர்ந்து வரும் நோய் பிறவி.

பிறவிப் பிணி உயிர்கட்கு என்றும் நீங்காது நிழல் போல் எய்து கின்றது. அப் பிணியை யகற்ற ஆன்றோர் அரும் பெருந் தவஞ் செய்தனர்.

மலத்தை:—

மலம் மூன்று வகைப்படும். ஆணவம் கன்மம் மாயை என்பன.

"புண்ணிய பாவங்களைப் பயக்கும் விருப்பு வெறுப்புக் களாய்ப் பொருந்துவது கன்மமலம்; மண்முதல் மாயா தத்து வம் முடிவாய் காணப்படுவது மாயாமலம்; சுட்டியறிவதாகிய விபரீத வுணர்வை பயப்பது ஆணவமலம்; இம் மூன்று மலங் களும் மெய்ஞ்ஞானிக்கும் நீங்குதல் வேண்டும்.

புண்ணிய பாவம் பொருந்துமிக் கான்மியமும்
மண்முதல் மாயைகாண் மாயையும்—கண்ணிய
அஞ்ஞானங் காட்டுமிவ் வாணவமும் இம்மூன்றும்
மெய்ஞ்ஞானிக் காகா விடு.

—சிவஞானபோத உதாரண வெண்பா.

மலநீக்கமே பிறவிநீக்கத்திற்குக் காரணமாகும்.

இவற்றுள் ஆணவமலம் மூலமலம் என்க. ஏனைய இரண்டும் இடையில் வந்த (ஆகந்துக) மலம் என்க.

கேவல நிலையில் அறியாமையை விளைத்து நிற்பது ஆணவமலத்தின் தன்னியல்பு; சகலநிலையில் கருவிகளோடு கூடி விபரீத வுணர்வைச் செய்வது அவ்வாணவமலத்தின் பொது வியல்பு.

சிவவொளியால் மிரட்டி:—

சிவப்பிரகாசத்தினால் ஆணவ இருளையும் பிறவிப் பிணியையும் நீக்குதல் வேண்டும் என்க. இடையறாத தியானத்தினால் ஆன்ம ஒளியுடன் சிவவொளி கலந்து பேரொளியாக விளங்கும். கட்டையைக் கடைவதனால் கட்டையினின்றுங் கனல் தோன்றுவது போல், ஆன்மாவாகிய கட்டையுடன் பிரணவமாகிய ஒன்றைக்கொண்டு தேய்க்கலுற்றபோது அத் தியானத்தில் தோன்றிய சிவஞான வொளியால் பந்தபாச முதலியவைகள் சாம்பலாவது திண்ணம்.

"ஆத்மாநம் அரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம்
த்யானநிர்மதநாப்யாஸாத் பாசம் தஹதிபண்டித:"

—த்யானபிந்தூபநிஷத்.

எனை இனிதா அழைத்து:—

முருகவேள் தன்னைநோக்கி "அன்பனே! இங்குவா" என்று அழைத்து அருள்புரியவேணும் என்று அடிகள் வேண்டுகின்றனர். இவ்வண்ணமே கீழ்வரும் பாடலிலும் வேண்டுமாறு காண்க.

"நீவாவென நீயிங் கழைத்து
பாராவர வாநந்த சித்தி
நேரேபர மாநந்த முத்தி தரவேணும்"

குழந்தைகள் உணவு செய்யாமல் வீதியில் வெய்யிலில் விளையாடுமானால் தாய் அக் குழந்தைகள் மீதுள்ள எல்லையற்ற கருணையால் வலிதில் அழைத்து நிழலில் வைத்து நீராட்டி, ஆடை அணிகலங்களால் அழகுசெய்து நல்லுணவு தந்து இன்பஞ் செய்வதுபோல், உயிர்களாகிய நாம் பாவமாகிய வெய்யிலில் உலகபசுபாச தொந்தங்களாகிய விளையாட்டுக்களில்

ஈடுபட்டிருக்கும் போது, தாயினும் சாலப் பரிவுடைய தயா சாகரமாகிய இறைவன் நம்மை பக்குவகாலத்தில் அழைத்து அருளமுதை யூட்டி அருள்புரிவான்.

எனது முடிமேலே இணைதாளளித்து:—

"பெருமானே! சிறியேனுடைய தலையின் மீது தேவரீருடைய சரணாரவிந்தங்களைச் சூட்டி யருள் செய்யவேணும்" என்று வேண்டுகின்றார்.

அடிகளுடைய வேண்டுகோளுக்கு இரங்கி கந்தவேள் கருணையுடன் அடிகள் சென்னிமேல் தமது சேவடியைச் சூட்டியருளினார். அகச்சான்றுகளாக அடியில் வரும் அமுத வாக்குகளைக் கண்டு தெளிக.

"இபமுகவ னுக்குகந்த இளையவ மருக்கடம்ப
எனது தலையிற் பதங்க ளருள்வோனே"

"சஞ்சரீகரி கரமுரல் தமனிய
கிண்கிணீமுக விதபத யுகமலர்
தந்தபேரருள் கனவிலு நனவிலு மறவேனே"

"எனைமனமுருக்கி யோகஅநுபுதி யளித்த பாத
எழுதரிய பச்சைமேனி யுமைபாலா" —திருப்புகழ்.

சாடுந்தனிவேல் முருகன் சரணஞ்
சூடும்படி தந்தது சொல்லுமதோ
வீடுஞ்சுரர் மாமுடிவேத மும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே —அநுபூதி.

திருமுருகன் திருவடி தலையிற் படுமாயின் அங்குள்ள அயன் கைஎழுத்து அழியும் என்க. சிவன் பரமபதி; சிவனுடைய ஏவலர் "அயன் அரி அரன்" என்ற மும்மூர்த்திகளும். சிவன் உத்தரவுப்படி அயன் ஆன்மாக்களின் தலையில் விதி விலக்குகளை எழுதுகின்றான். இந்த நுணுக்கத்தை ஒளவையார் மிக இனிமையாகக் கூறுமாறு காண்க.

"இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி
விட்ட சிவனுஞ் செத்து விட்டானோ"

"அயன் எழுதிவிட்டான்" என்று கூறாமல் "சிவன் எழுதி விட்டான்" என்று கூறும் அழகிய நயத்தைக் காண்க.

அந்த அயன் கைஎழுத்து முருகன் திருவடி பட்டவுடன் அழிந்து ஒழியும்.

"கால்பட்டழிந்த திங்கென் றலைமே லயன் கையெழுத்தே"

மயில்மேலிருத்தி:—

"எம்பிரான் ஏறும் மயிலின் மீது தானும் ஏறியிருத்தல் பொருந்துமோ?" எனின், சிவமாந் தன்மை பெற்ற நம்பியாரூரர் சிவபிரான் ஏறும் அயிராவணம் என்ற யானைமீது ஏறிச் சென்றதை யுன்னுக. சண்டீசர் இடபவாகனத்தின் மீது பவனி வருவதைக் காண்க.

இனி மயிலின் மீது இருத்தல் என்பதன் உட்கருத்து, மயில் என்பது பிரணவம். ஓம் என்னும் தனி எழுத்தின் நாதத்துள் அடங்கியிருப்பது என்க.

ஒளிர் இயல் வேலளித்து:—

வேல் என்பது ஞானம். ஞானம் ஒளிமயமானது; இயல்பாகவே ஒளிசெய்வது. எனவே அந்த ஒளிமயமான ஞானத்தைத் தருமாறு அடிகள் வேண்டுகின்றனர்.

ஞானமே பரகதிக்குச் சாதனம் ஆதலின், "ஞான மலது கதி கூடுமோ" என்பார் தாயுமானர்.

ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமு நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவா
ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே. —திருமந்திரம்.

இருவோரும் ஒருவாகேன:—

இறைவனும் ஆன்மாவும் ஒன்றுபடும் அத்துவித முத்தியை இச் சொற்றொடர் குறிக்கின்றது. இன்பமும் அறிவும் ஓருருவாகக் கொண்ட பதியுடன் ஆன்மா ஒன்றுபட்டு இன்பந் துய்க்கும்.

"நீயு நானுமாய்
இறுகும்வகை பரம சுக மதனையருள் இடைமருதில்
ஏக நாயகா" —திருப்புகழ்.

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போல்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே"

என்ற சிவஞானபோதத்தி னோராஞ் சூத்திரத்தில் கண்ட அத்துவிதமாகும். அது அபேத சம்பந்தமாகிய ஐக்கியமுமன்றி, பேதாபேத சம்பந்தமாகிய தாதான்மியமுமன்றி, பேத சம்பந்தமாகிய சையோகமுமன்றி, கலப்பும் உடனுதலும் வேருதலுமாகிய மூன்றும் தன்னிடந்தோன்ற நிற்கும் அருமையுடையதாகும். ஆன்மபோதமுங் கண்ணொளியுந் தம்முள் கலந்து நிற்றல்போல் என்று உணர்க.

......................"இருவோரும்
ஓர்ந்த மருவி ஞான மாவிஞ்சை முதுகினேறி
லோகங்கள் வலமதாட அருள்தாராய்" —திருப்புகழ்.

கயிலையிறையோன்:—

சிவபெருமான் அருள் திருமேனி தாங்கி எழுந்தருளிய திருமலை திருக்கயிலாயம். அது கோடி சூரிய ஒளியுடன் தூய வெண்மையுடன் விளங்குவது.

பாச நீக்கித்தன் பாற்படு நல்லருள்
ஈசன் நல்கும் இயல்பென; எய்தினோர்
தேசு மாற்றிச் சிறந்ததன் மெய்யொளி
வீசுகின்றது வெள்ளியங் குன்றமே.—கச்சியப்பசிவாச்சாரியர்

கருநோயறுத்து:—

விநாயகப் பெருமான் கருநோயை யறுக்க வல்லவர். வினையே பிறவிக்குக் காரணம். "வினைப்போகமே யொரு தேகம்" என்பார் பட்டினத்தடிகள். அவ்வினையை வேருடன் களைய வல்லவர் விநாயகர். "விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்"

எனது மிடிதூள் படுத்திவிடு:—

அருணகிரிநாதருக்கு விநாயகர்செய்த அருட்டிறத்தை இது குறிப்பிடுகின்றது. இங்கே மிடி என்பது அவாவைக் குறிக்கும்.

"செல்வமென்பது சிந்தையி னிறைவே
அல்கா நல்குர வவாவெனப்படுமே" —குமரகுருபரர்.

அவாவே பிறவிக்குக் காரணமாதலின் அவாவற்றாலன்றி பிறவிநோய் தீராதென்று தெளிக. அவாவை யகற்றுவதே அறிவுடைமை.

அவாவென்ப எல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து. —திருக்குறள்.

கரிமாமுகக் கடவுள்:—

விநாயகப் பெருமான் யானைமுகம் உடையவர். அதன் உட்பொருள்யாது? என ஐயுறுவார் கீழ் வருங் கருத்துக்களைக் கண்டு தெளிக.

விநாயகர் திருமுகம் யானைமுகம். அதில் ஒரு கொம்பு தோன்றும். கழுத்திற்குக் கீழ் தேவவடிவம். ஆண்யானை என்னின் இரு கொம்புகள் இருத்தல்வேண்டும். பெண்யானை எனின் கொம்பே இருத்தல் கூடாது. ஒரு கொம்பிருத்தலால் ஆணுமன்று பெண்ணு மன்று என்பது போதரும். யானை முகமும் தேவசரீரமும் இருத்தலினால் உயர்திணையும் அன்று அஃறிணையுமன்று என்பது போதரும். எனவே பரம்பொருள் ஆணும் பெண்ணும் உயர்திணையும் அஃறிணையும் அல்லாதவர் என்றும், எல்லாம் ஆனவர் என்றும் கருதுக. இதனை சிவஞானசுவாமிகள் கூறுமாறு காண்க.

"மணிகொண்ட கோடொரு மருங்குண்மை யாற்பெண்மை
வடிவென்று மஃதின்மையோர்
மருங்குண்மை யாலாண்மை வடிவென்று மீதுகீழ்
மாறிய திருக்காட்சியும்
அணிகொண்ட வுயர்திணைய தென்று மஃறிணை யென்றும்
யார்க்குங் கிளக்க வரிதாம்
ஐங்கரச் சிந்துரத் தின்கழற் செஞ்சரண
மஞ்சலித்துத் துதிப்பாம்"

அடியார்கள் கருதாவகைக்கு வரமருள்:—

பரம காருண்யக் கடவுளாகிய கணேசப் பெருமான், அடியவர்கள் இதுவேண்டும் என்று நினைக்குமுன் அவர்கட்கு வேண்டுவதை வழங்குவார். "விநாயகனே வேட்கை தணிவிப்பான்"

ஞான தோப்பை:—

விநாயகரது பெருவயிறு ஞானத்தின் பெருக்கத்தைக் குறிக்கின்றது. அகிலாண்டங்கள் யாவும் அப்பெருமானுடைய திருவுதரத்தில் அடங்கியுள்ளன.

ஒருஞான பத்தினி:—

ஒரு—ஒப்பற்ற. ஒப்பற்ற ஞானம் சிவஞானம் என்க. ஞானபத்தினி-வள்ளியம்மை. வள்ளியம்மையாரைக் குறிக்கும் இடங்களில் ஞானம் என்ற அடை கொடுத்துச் சிறப்பித்துக் கூறும் அமுதவாக்குகள் இங்கு நினைவுகூரற்பாலன.

"சுந்தர ஞான மென்குறமாது"

..............." வனமீது செறி
ஞானகுற மாதைதினை காவில் மண மேவுபுகழ் மயில்வீரா"

"ஏடார் குழற் சுருபி ஞான தனத்தி மிகு
மேராள் குறத்தி திரு மணவாளா" —திருப்புகழ்.

சிலைதூளேழுப்பி:—

சிலை-கிரவுஞ்சமலை. தாரகனுக்குத் துணையாக நின்று மாயைகள் செய்த இம்மலையை முருகவேள் திருவேற்படையால் துகள்படுத்தினர்.

கருத்துரை

விநாயகரது தம்பியே! வள்ளி மணவாளா! அமரர் சிறை மீட்ட அண்ணலே! பிறவியையும் மலத்தையும் நீக்கி, அடியேனை அழைத்து திருவடி தீக்கை புரிந்து ஞானத்தைத் தந்து பிரணவ நாதத்துள் இருத்தி அத்துவிதமுத்தி பெற உபதேசித்தருளுவீர்.

—:—

உ

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம்

திருஞானசம்பந்த நாயனர் புராணம்

(கஅ0-ம் பக்கத் தொடர்ச்சி)

அரவின் விடம் அகற்றியது

திருஞானசம்பந்த நாயனர் திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டரது திருமடத்தில் எழுந்தருளியிருந்தபோது, அடியார் குழாங்களுடன் அருகில் உள்ள திருமருகல் என்ற திருத்தலத்திற்கு எழுந்தருளினர். அரவையும் பிறையையும் செஞ்சடைமேல் வைத்த மாணிக்கவண்ணரைத் தொழுது, திருப்பதிகம் பாடித் துதித்து, அப்பதியில் ஒரு புடை எழுந்தருளியிருந்தார்.

அவ்வாறு பிள்ளையார் இருந்த நாள்களில் ஒருநாள் ஒரு வணிகன் வழிச்செல்வோனகி, ஒரு கன்னிகையை அழைத்துக் கொண்டு, திருமருகல் என்ற தலத்திற்கு வந்தான். பொழுது சென்றதனல் திருக்கோயிலின் புறத்தே ஒருமடத்தில் படுத்துத் தூங்குவானயினன். அவ்வாறு துயில்கின்றவன் கொடிய அரவந்தீண்ட, விடந் தலைக்கேறி உயிர் பிரிவோனயினன். அதுகண்ட கன்னி அளப்பற்ற துயரமுற்றள். அவள் மணஞ் செய்யப் பெருதவளாதலினல் அவ்வணிகனை அரவந்தீண்டியுந் தான் தீண்டாமல் நின்றள். ஆறுதல் கூறுவதற்கு வேறு ஒருவரும் இன்றி, ஆண்சிங்கம் போன்ற இறந்த வணிகன் அருகில் வீழ்ந்து, கொழுகொம்பிலாத பூத்த இளங்கொம்பு போன்ற அம்மடமங்கை தளர்ந்து தனித்துப் புலம்பினள். அவள் அழுகுரலைக் கேட்டு அங்கிருந்த இடியும் கருடனும் போன்ற மந்திரவாதிகள் பலர் வந்து தத்தம் மந்திரசக்தியைக் கொண்டு முயன்றும் விடங் குறையாதாயிற்று. விடியற்காலை அவ்வணிகமாது புலம்புவாள்: "ஏ வணிகர் குலமணியே! என்னைப் பெற்ற அன்னையையும் அத்தனையும் பிரிந்து உன்னையே துணையாக நம்பி உன்னுடன் வந்தேன். அந்தோ! அரவந் தீண்ட என்னை விட்டு மாண்டுபோனயே. இனி யான் என் செய்வேன்? எனக்கு வேறு துணையேது? என்னை ஆட்கொள்வார் ஒருவருமில்லையே! இத்துயரை நீக்குபவருமில்லையே. உயிர்போன்ற வணிகர் ஏறே! இனி யான் வாழேன்" என்று கூறி யழுதாள்.

அவ்வாறு அழுகின்ற அப் பெண்மணி அறிவின் திறத்தினலே திருக்கோயில் வாயிலில் நின்று, எம்பிரான் எழுந்தருளியுள்ள திசை நோக்கிக் கை கூப்பித் தொழுது அழுது துதிப்பாள்.

அடியாராம் இமையவர்தங் கூட்ட முய்ய
அலைகடல்வாய் நஞ்சுண்ட அமுதே! செங்கண்
நெடியானு நான்முகனுங் காணுக் கோல
நீலவிட வரவணிந்த நிமலா! வெந்து
பொடியான காமனுயிர் இரதி வேண்டப்
புரிந்தளித்த புண்ணியனே! பொங்கர் வாசக்
கடியாரு மலர்ச்சோலை மருங்கு சூழுங்
கவின்மருகற் பெருமானே காவாயென்றும்.

"கருணைவடிவாய கண்ணுதற் கடவுளே! அடியவராகிய அமரர் உய்ய அலைகடல் நஞ்சினை யுண்ட அமுதமே! அயனும் அரியும் அறியாத அரவணிந்த அண்ணலே! இரதிதேவி வேண்டுதலும் வெந்து சாம்பரான மன்மதனை யெழுப்பி அருள் புரிந்த ஐயனே! சோலை சூழ்ந்த திருமருகலில் எழுந்தருளிய எந்தையே! அபயமென வந்தடைந்த மார்க்கண்டேயர்க்காக, சீறிவந்த இயமனை உதைத்த திருவடியையுடையவரே! இந்தக் கொடிய விடவேகந் தீருமாறும், எளியேன் இடர்க்கடலினின் றுங் கரையேறுமாறும் அருள்புரிவீர். பிறைமதியைத் தரித்த சிவந்த சடையவனே! திருமருகல் மேவிய தேவதேவா!" என்று கூவி, திருவருளைச் சிந்தித்து வாய்விட்டுக் கதறி யழுதாள்.

இவ்வாறு இளங்கொடிபோல் வாடிவருந்தும் வணிகப் பெண்ணின் அழுகுரல், இறைவழிபாட்டின் பொருட்டு வரும் திருஞானசம்பந்தருடைய செவியில் வீழ்ந்தது. திருவுள்ளத் தில் கருணை மிகவுங் கொண்டு, அடியவர்கள் சூழ அக்கன்னி யின் அருகிற் சென்றருளினர். சிவனருளை நாடிச் சிந்தை நொந்து வருந்துவாளை நோக்கி, "அம்மா! நீ அஞ்சற்க; உனது துன்பத்தையும் உங்கள் வரலாற்றையும் உரைப்பாய்" என்று வினவியருளினர்.

வணிகமாது கரமலர்களைச் சிரமீது கூப்பிக்கொண்டு, கண் ணருவி பொழிய, காழிப்பிள்ளையார் கால்மலர் மீது வீழ்ந்து கழறலாயினள். "பெருமானே! வளமையுடைய வைப்பூர் என்ற ஊரின் தலைவனான தாமன் என்பவர் எனக்குத் தந்தை. இவர் எனது தந்தையின் மருகர். எனது பிதாவுக்கு ஏழு பெண்கள். என் தந்தை ஒவ்வொரு பெண்ணையும் இவருக்குத் தருவதாக வாக்களித்து, இவரை நம்பவைத்துப் பிறகு, நிரம்பப் பொன் னைப் பெற்றுக்கொண்டு அயலார்க்கே யளித்தனர். என்னை யொழிய ஆறு பெண்களையும் அவ்வாறு இவரை ஏமாற்றிப் பிறருக்கே மணம் புரிவித்தனர். அதனால் மனம் வருந்திநின்ற இவரிடம் இரக்கமும் அன்பும் பூண்டு, தாய்தந்தையரை விடுத்து, அவர்கள் அறியாவண்ணம் இவரைச் சார்பாகக் கொண்டு புறப்பட்டுவந்தேன். எம்பிரானே! இவருடன் இன்று இம் மடத்தில் தங்கினேன்; இவர் பாம்பு தீண்டி

மாண்டார். நடுக்கடலில் கப்பல் கவிழப் பெற்றூர்போல் கலங்கி நின்றேன். எனது சுற்றத்தார் போல வந்து என் துயரமெல்லாந் தீர அருள்செய்தீர்'' என்று கூறினாள்.

கற்றவர்கள் தொழுது ஏத்துங் காழிவேந்தர், கருணையினால் அரவின் விடந் தீருமாறு அழகிய மருகற் பெருமானைப் பாடுவாராயினார்.

சடையானை எவ்வுயிர்க்குந் தாயா னானைச்
சங்கரனைச் சசிகண்ட மவுலியானை
விடையானை வேதியனை வெண்ணீற்றானை
விரவாதார் புரமூன்றும் எரியச் செற்ற
படையானைப் பங்கயத்து மேவினானும்
பாம்பணையிற் றுயின்றானும் பரவுங் கோலம்
உடையானை யுடையானே! தகுமோ இந்த
ஒள்ளிழையாள் உண்மெலிவென் றுரைத்துப் பாட.

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரு மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே.

திருஞானசம்பந்தப் பெருமான் இப்பதிகம் பாடியருளியவுடனே விடந்தீர்ந்து வணிகன் எழுந்தான். திருவடியில் வீழ்ந்து வணங்கிய நங்கையை அந்நம்பி மணந்து இன்புறுமாறு, அன்பர்களைத் திருமணஞ் செய்துவைக்குமாறு பணித்தருளினார். வணிகனுக்கும் அக்கன்னிகைக்கும் திருமணம் நிகழ்ந்தது.

திருமுருக நாயனார் சந்திப்பு

சிறுத்தொண்ட நாயனார் திருமருகல் சென்று, பிள்ளையாரைத் தொழுது, மீண்டுந் திருச்செங்காட்டங்குடிக்கு வந்தருளுமாறு வேண்டினார். பிள்ளையார் விடையவர்பால் விடை பெறும்பொருட்டு திருமருகல் கோயிலிற் சென்று வணங்க, திருச்செங்காட்டங்குடி கணபதீச்சுரத்தில் உள்ள திருக்கோலத்தை இறைவர் காட்டியருளக் கண்டுகளித்தார். திருச்செங்காட்டங்குடி சென்று பரமனைப் பணிந்து சிலநாள் தங்கியிருந்தார்.

பின்னர், பூம்புனற் பொய்கை சூழ்ந்த திருப்புகலூரைச் சேவிக்க விரும்பிப் புறப்பட்டார். சிறுத்தொண்டருக்கு திருச்செங்காட்டங்குடியில் இருந்து பணிசெய்யுமாறு விடைதந்து, இடையில் உள்ள திருத்தலங்களை வணங்கிக் கொண்டு, திருப்புகலூரை யடைந்தார். திருப்புகலூரில் வாழும் முருக நாயனார் மிகவுமகிழ்ந்து எதிர்கொண்டு இறைஞ்சினார். புகலி வேந்தர் புகலூர் மேவிய புனிதரைப் போற்றிப் புகழ்ந்து, முருக நாயனாரது திருமடத்தில் தங்கியருளினார். திருப்பதிகத்தில் முருக நாயனாரது திருத்தொண்டினைச் சிறப்பித்துப் பாடியருளினார்.

தொண்டர் தண்கயம் மூழ்கித் துணையலுஞ் சாந்தமும் புகையும்
கொண்டுகொண் டடிபரவிக் **குறிப்பறி முருகன்** செய்கோலம்
கண்டுகண்டு கண்குளிரக் களிபரந் தொளிமல்கு கள்ளார்
வண்டு பண்செயும் புகலூர் வர்த்தமானீச் சரத்தாரே.

திருஞானசம்பந்தர் திருப்புகலூரில் தங்கியிருந்தபோது, திருநாவுக்கரசர் திருவாரூர் தியாகேசரைச் சேவித்துவிட்டுத் திருப்புகலூருக்கு வந்தருளினர். அப்பரது வரவையறிந்த பாலறுவாயர் பெரிதும் உவந்து அன்பருடன் புறப்பட்டு திருப்புகலூர் எல்லை கடந்து எதிர்கொண்டார். அரசுங் கன்றும் ஒருவரையொருவர் அன்பினால் வணங்கிக் கொண்டார்கள். ஞானசம்பந்தர் வாக்கின் மன்னரை நோக்கி, "அப்பராகிய தேவரீரை வரப்பெற்று திருவருட் பேற்றினை யாம் பெற்றோம்; திருவாரூரில் எத்தன்மையில் இறைவரைத் தொழுது உய்தீர்?" என்று வினவியருளினர். அப்பரடிகள் ஆரூர் திருவாதிரைத் திருநாளின் சிறப்பினைக் கூறியருளினர்.

திருவாரூர் செல்லல்

பாலறுவாயர் திருவாரூரின் சிறப்பை திருநாவுக்கரசர் கூறக் கேட்ட அப்பொழுதே திருவாரூர் சென்று புற்றிடங் கொண்ட புனிதரைப் போற்றுதற்கு விரும்பி, "அப்பரே! திருவாரூர் சென்று செஞ்சடைப்பிரானை வணங்கிவிட்டு வந்து உம்மை இங்கு சந்திப்பேன்" என்று கூறி, உடனே திருவாரூரை நோக்கி விரைந்து புறப்பட்டுச் சென்றனர். அப்பரடிகள் திருப்புகலூர் சென்றனர்.

பிள்ளையார் அளவற்ற காதலுடன் வழியில் திருவிற்குடி வீரட்டானத்தைத் தொழுது திருவாரூர் அருகில் வந்தருளினர். பொன்னுலகம்போல் ஒளிசெய்யுந் திருவாரூரைக் கண்டு திருப்பதிகம் பாடியருளினர். முத்துச் சிவிகையை விட்டு இறங்கி மலர்தூவித் திருவாரூரை வணங்கினர். திருவாரூர் மேவிய அடியார்கள் எதிர்கொண்டு இறைஞ்சினர்கள். பிள்ளையாரும் எதிர்தொழுது திருவாரூரில் புகுந்தார். அப்பொழுது அமரர் மலர்மழை பொழிந்தனர். மங்கல முழவங்கள் ஒலித்தன. திருக்கோயிலின் முன்னுள்ள தேவாசிரிய மண்டபத்தைத் தொழுது எழுந்தனர். உட்புகுந்து புற்றிடங் கொண்டாரைப் பன்முறை பணிந்தனர்.

பணிந்து வீழ்ந்தனர் பதைத்தனர் பரவியபுளகம்
அணிந்த மேனியோ டாடினர் பாடினர் அறிவில்
துணிந்த மெய்ப்பொரு ளானவர் தமைக்கண்டு துதிப்பார்
தணிந்த சிந்தையின் விரைந்தெழு வேட்கையில் தாழ்ந்தார்.

திருவாரூரில் திருமடத்தில் தங்கி தியாகேசப் பெருமானைக் காலந்தோறும் பணிந்து பல பதிகங்கள் பாடிப் பரவினர். அங்கிருந்தபடியே திருவலிவலம், திருக்கோளிலி முதலிய திருத்தலங்களைச் சேவித்தார்.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர்பயில்வலி வலமுறை யிறையே.

வஞ்சமனத் தஞ்சொடுக்கி வைகலுநற் பூசனையால்
நஞ்சமுது செய்தருளு நம்பியென வேநினையும்
பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபத மீந்துகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சணவுங் கோளிலியெம் பெருமானே.

திருக்காருயில், திருஏமப்பேறூர், திருச்சாட்டியக்குடி, திருக் கன்றுப்பூர் முதலிய திருத்தலங்களையுஞ் சென்று வணங்கினார்.

தந்தையார் போயினார் தாயரும் போயினார் தாமும் போவார்
கொந்தவேல்கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்கொண்டுபோவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம் வைத்தியால் ஏழை நெஞ்சே.
அந்தணாரூர் தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல் நெஞ்சே.

திருவாரூரினின்றும் பிரியா விடைபெற்றுப் புறப்பட்டு, திருப்பனையூர், இராமனதீச்சரம் வணங்கி திருப்புகலூரை யடைந்தார். திருநாவுக்கரசரும் முருக நாயனாரும் ஏனைய திருத் தொண்டர்களும் எதிர்கொண்டு வணங்கினார்கள். பிள்ளையார் திருக்கோயில் சென்று வள்ளலாரை வணங்கினார். முருக நாயனார் திருமடத்தில் தங்கியருளினார். சிறுத்தொண்டரும், திருநீலநக்கரும் அங்குவந்து கலந்து கொண்டார்கள்.

திருஞானசம்பந்தர் திருப்புகலூரை விட்டுப் புறப்பட்ட னர். வாகீசப் பெருந்தகையார் அவருடன் சென்று தலயாத் திரை செய்யப் புறப்பட்டனர். சிறுத்தொண்டரும் திருநீல நக்கரும் தத்தம் பதி சென்றார்கள். முருக நாயனாரை அங்கு இருத்தி, முத்துச் சிவிகை பின் வர பிள்ளையார் நடந்து சென்றருளினார். அப்பரடிகள் பிள்ளையாரை நோக்கி "இறைவர் உமக்குத் தந்த இச் சிவிகைமீது எழுந்தருளி வருவீர்" என்று வேண்டினார். "திருவருளின் திறம் அதுவாயின் திருத் தொண்டர்களுடன் நீர் முன்னாகச் செல்லுந் தலத்திற்கு அடியே னுந் தொடர்ந்து வருவேன்" என்று கூறியருளினார். அது முதல் அப்படியே அப்பர் முன்னே சென்று சேர்ந்த திருப் பதிக்கு புகலி வேந்தர் போவாராயினார்.

குங்குலியக்கலயர் சந்திப்பு

திருஅம்பர்மாகாளம் சென்று, திருப்பதிகம்பாடி வழி பட்டுத் திருக்கடவூர் சென்றனர். குங்குலியக்கலய நாயனார் அடியார் கணங்களுடன் ஓடி வந்து வணங்கி எதிர்கொண்டனர். காலனையுதைத்த கண்ணுதலாரது சேவடியைச் சேவித்து, குங்குலியக்கலயரது திருமடத்தில் தங்கி, அவர் தந்த விருந்தினை ஏற்று அமர்ந்திருந்தார்.

அங்கிருந்து புறப்பட்டு திருஆக்கூர், திருமீயச்சூர், திருப் பாம்புரம் முதலிய திருத் தலங்களைத் தெரிசித்துகொண்டு திருவீழிமிழலை நோக்கிச் சென்றனர். (தொடரும்.)

உ

முருகா

கற்பு

விஜயகுமாரி

வீரசேகரன்:— பெண்ணே! என் அருமைக்கண்ணே! எப்போதும் மலர்ந்துவிளங்கும் உனது செந்தாமரை முகம் ஏன் வாடி வதங்கி யிருக்கின்றது? உனக்கு என்ன கவலை? எனது உயிரினும் இனியாய்! உன் முகவாட்டத்தைக் கண்டு என் மனம் பெரிதும் வருந்துகின்றது.

விஜயகுமாரி:—அன்பு நிறைந்த ஆர்வலரே! தங்களைக் கணவராகப் பெற்ற எனக்கு ஒரு கவலையும் இல்லை. தாங்கள் தொண்டமான் சக்ரவர்த்தியின் சேனையில் போர்வீரராகச் சேர்ந்து, அடிக்கடி போர்முகஞ் செல்லுகின்றீர். அது குறித்துத் தான் எனக்குப் பெருங்கவலை. பிராணேசா! மிகவும் பயங்கரமானது போர்முனை. திடீர் என்று தங்கள் உயிருக்கு இறுதி வருமானால் என் வாழ்வுக்கு இறுதிநேருமே. உலகிலே எத்தனையோ தொழில்கள் இருக்கின்றன. ஏதாவது ஒரு தொழிலைத் தாங்கள் மேற்கொள்ளக்கூடாதா? உயிர் நிச்சயமில்லாத அச்சத்தைத் தரும் இந்த யுத்தமென்றால் தங்கட்குக் கரும்பாக இருக்கின்றது. அதை நினைக்கும்போதெல்லாம் என் நெஞ்சு துடிக்கின்றது.

வீரசேகரன்:—கண்மணி! இதற்காகவா வருந்துகின்றாய்; சீசீ! இது உனக்குத் தகாது. வீரனுடைய மனைவியாகிய நீ இப்படிக் கோழையாக இருக்கலாமா? நம் நாட்டிற்கு வீரமும் ஞானமும் இருகண்களாகும். வீட்டிற்கு ஒரு போர் வீரன் இருத்தல் வேண்டும். அப்போதுதான் நம் நாடு சுதந்தர நாடாகத் திகழும். வீரமே மனிதனுக்குச் சிறந்த அணிகலம். வீரத்தினால் எய்தும் புகழே விழுமியது. வீர அபிமன்யுவைப் புகழாதார் யார்? ஆதலினால் நீ வருந்தற்க. "நம் கணவன் நாட்டிற்கு நலஞ்செய்யும் வீரத்தியாக விற்பன்னனாக விளங்க வேண்டும்" என்று வீராங்கனையாம் அன்னை காமாட்சியை வேண்டு. வீரமுந் தியாகமும் உடையவராய் சிறிது காலம் வாழ்ந்தாலும் பெருமையாகும். கோழைகளாக நெடுங்காலம் வாழ்வது உமிக்குவியல் கருகுவதற்குச் சமானமாகும். தைல முள்ள மரங்கள் சுடர்விட்டுச் சிறிதுநேரம் "திகுதிகு" என்று எரிவது சிறப்பல்லவா? சாப்பிட்ட இலையைத் தூக்கி எறிவது போலே கவலையைத் தூக்கி எறிவாய்" என்று மனைவியை தைரியப்படுத்தினான்.

காஞ்சிபுரத்தை யாண்ட தொண்டமான் சக்ரவர்த்தியின் சேனையில் போர்வீரனாக நமது வீரசேகரன் பணிபுரிந்து

வந்தான். பலப்பல தடவை போர்முகங்களுக்குச் சென்று அஞ்சா நெஞ்சுடன் போர்புரிந்து வெற்றிகண்டு வந்தான். அவன் மனம் சதா போரையே விரும்பியது. உயிரைத் துரும்பாகவும் போரைக் கரும்பாகவும் எண்ணினன். வாள் வலியாலும் தோள் வலியாலுஞ் சிறந்து, போரில் சக்கரம்போல் சுழன்று பகைவர்கள் தலையை உருட்டுவான்.

அவன் மனைவியாகிய விஜயகுமாரி, தன்கணவனுடைய வீரதீரச் செயலை யறிந்து ஒரு சமயம் வியப்படைவாள்; கணவன் உயிர்க்கு இறுதி நேருமோ என்று ஒரு சமயம் உறுதியின்றி உள்ளம் உலைவாள். கற்பு நெறிநின்ற அந்த உத்தமி கணவனை உன்னி உன்னி உருகுவாள். கணவன் போருக்குச் சென்றபோதெல்லாம் விஜயத்தோடு வாகைமாலை சூடி நாயகன் சுகமே திரும்பவேண்டும் என்று, கஞ்சி காமாக்ஷியைத் துதி செய்வாள்.

அக்காலத்தில் உள் நாட்டுக் குறுநில மன்னர்கள் ஒற்றுமையின்றி அடிக்கடி போர்புரிந்து வந்தார்கள். நாட்டில் அமைதியின்றிக் குழப்பமும் கலவரமும் களிநடம் புரிந்தன. பல முறை யுத்தத்தில் சென்று வீர தீரத்துடன் போர் புரிந்து வெற்றி கண்டதனல் வீரசேகரனை உப சேனதிபதியாக தொண்டமான் சக்ரவர்த்தி நியமித்தார்.

சித்தூரை யரசு புரிந்துவந்த சிற்றரசனுகிய மயிந்தன் என்பான் தனது படைகளுடன் காஞ்சீபுரத்தின் மீது படையெடுத்துவந்தான். தொண்டமான் சக்ரவர்த்தி மிகவுஞ் சீற்றங்கொண்டு தனது சேனதிபதியையும், உபசேனதிபதி வீரசேகரனையும் சதுரங்கசேனைகளுடன் போருக்கு அனுப்பினுர். இரு திறத்துச் சேனைகளும் ஒன்ருேடொன்று எதிர்த்துக் கடும்போர்புரிந்தன. தோல்வியும் வெற்றியும் இன்றி பதினைந்து நாட்கள் பெரும்போர் நிகழ்ந்தது. இறுதியில் மயிந்தனுடைய சேனைகள் வீராவேசத்துடன் போர் செய்ததன்பயனுக, தொண்டமானுடைய முதல் சேனதிபதி மடிந்தான். அதனல் பெரிய பரபரப்பு உண்டாயிற்று. சேனைகள் அங்கும் இங்குமாக நாலா பக்கங்களிலும் சிதைந்து ஓடின. முடிவில் தொண்டமானும் மயிந்தனும் சமாதானஞ் செய்துகொண்டார்கள். மயிந்தன், தன்சேனைகளுடன் சித்தூர் போய்ச் சேர்ந்தான்.

உபசேனதிபதி வீரசேகரனைக் காணுது தொண்டமான் திகைத்தனர். போர்க்களத்தில் மாண்ட பிணக்குவியலைப் புரட்டிச் சோதித்தனர். வீரசேகரனுடைய உருவங் காணப்பட்டது. தலைமட்டும் இல்லை. தொண்டமான் பெரிதும் வருந்திஞர். பல போர் முகங்களில் வெற்றிகண்ட தன் உயிரினும் இனிய வீரசேகரன் மாண்டது குறித்து உள்ளம் கவற்சியுற்ருர். அவனுடைய உடைகளையும், அவன் தோளில் இருந்த

வீரகடகத்தையும் வீரசேகரன் மனைவி விஜயகுமாரியிடம் அரசன் அனுப்பிவைத்தார். அது கண்ட விஜயகுமாரியின் துயரத்தை அளக்க முடியுமோ? தீயின் மீது கிடந்து நெளியும் நீள் புழுவாகத் துடித்தாள். "அந்தோ! அந்தோ" என்று அலறினாள்.

"பிராணபதி! என் ஆருயிர்த் துணையே! என்னைத் துன்பக் கடலில் அழுத்திவிட்டு எங்கு சென்றீர்? இனி தங்கள் பொன் முகத்தைக் காணுநாள் என்றோ? நான் என்ன பாவஞ் செய்தேனோ? முற்பிறப்பில் இனிது ஒற்றுமையாக வாழ்ந்த கணவனையும் மனைவியையும் பிரித்துவைத்தேனோ? கோள் சொல்லிக் குடி கெடுத்தேனோ? நல்லவர் மனத்தை நடுங்க வைத்தேனோ? இப்படி நிகழும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லையே? என் இன்ப மாளிகை இடிந்துவிழுந்து விட்டதே. விதியை நோவேனோ? போர்முனையின் கொடுமையை நோவேனோ? தெய்வமே! இப்படியும் என்னைச் சோதிக்கலாமா? கணவனையிழந்து நான் எவ்வாறு வாழ்வேன்? என் இதயம் இன்னும் வெடிக்கவில்லையே? இரும்பினும் கல்லினும் எனது மனம் கடினமானது. வீரசுவர்க்கஞ் சென்ற என் கணவனை அங்கு சென்று நான் சந்திக்கவேண்டாவோ? இன்னும் இந்த உலகில் என்னவேலை? பரம்பொருளே! இரதியின் கவலையைத் தீர்த்த பார்வதிநாதா! பங்கயப்பாதா! என் துன்பத்தைத் தீர்த்தருள்வாய்" என்று விஜயகுமாரி கதறி யழுதாள். அவளுடைய துன்பத்தைக் கண்டு கல்லும் உருகியது.

ஓராண்டு கழிந்தது. விஜயகுமாரி கணவனை நினைந்து நினைந்து மெலிந்தனள். உணவுக்கும் உடைக்கும் வழியின்றி வருந்தினாள். பாத்திரங்களையும் வேறு பல உடைமைகளையும் விற்று விற்று ஒருவாறு வயிற்றை வளர்த்தாள். மேற்கொண்டு விற்பதற்கு ஒன்றும் இன்றி இடர்ப்பட்டாள். தனது வறுமைத் துன்பத்தையும், தன் கணவன் போர்க்களத்தில் புரிந்த வீர தீரச் செயல்களையும், தனக்கு உதவிபுரியும் அவசியத்தையும் அரசனுக்குக் கடித மூலம் அறிவித்தாள்.

அரசன் விஜயகுமாரியின் பரிதாபகரமான நிலைக்கு இரங்கி மூன்று காணி நிலத்தை அவளுக்கு இனமாக வழங்கினான். அவளுடைய வறுமை நோய்க்கு மருந்தாக அது அமைந்தது. தனது தம்பியை விட்டு அந்த நிலத்தைப் பண்படுத்தினாள். கலப்பையால் உழுகின்றபோது கணீல் என்ற ஒலி எழுந்தது. அது கேட்டு அதிசயமுற்று அந்த இடத்தை அகழ்ந்தபோது ஒரு பெரும் புதையல் கிடைத்தது. விஜயகுமாரியின் தம்பி அதனை ஒருவரும் அறியாவண்ணங் கொணர்ந்து வீட்டில் சேர்த்தான். விஜயகுமாரி அதைக் கண்டு விம்மிதமுற்றாள். நெடுநேரம் அப்புதையலைப் பற்றியே சிந்தித்தாள்.

மறுநாள் காலை அப்புதையலைத் தம்பியின் தலையில் வைத்து, நேரே அரசவை சென்றாள். மன்னர் பெருமான் முன்னே பொன்னிறைந்த அண்டாவை வைத்துத் தொழுதாள்.

மன்னன்:— அம்மா! தாங்கள் யார்? இது ஏது? இங்குக் கொணர்ந்த காரணம் யாது?

விஜயகுமாரி:— வேந்தரேறே! நான் தங்கள் உபசேனாதிபதியும் போரில் மாண்டவருமாகிய உத்தமருடைய பத்தினி. என் பெயர் விஜயகுமாரி. தாங்கள் எனது வறுமைதீரும் பொருட்டு வழங்கிய நிலத்தை உழுதபோது இப்புதையல் கிடைத்தது. அதனால் இதனைத் தங்கள்பால் சேர்க்கின்றேன். எடுத்துக்கொள்ளுங்கள்.

மன்னன்:—(அவளுடைய நேர்மையையும், அவாவின்மையையும் உன்னி உள்ளம் உவந்து) அம்மா! உனது ஒப்பற்ற நற்குணத்தினை எண்ணி மிக்க மகிழ்ச்சியுறுகின்றேன். பெரிய தனவந்தர்கட்கும் இந்த நற்குணம் உண்டாகாது. தாங்கள் வறுமைப்பிணியால் வாடி வருந்தியும் "வறிஞர்க்கழகு வறுமையிற் செம்மை" என்றபடி, ஆசைப் பேயை அகற்றி, கிடைத்த தனப் புதையலைக் கொணர்ந்து தந்த உயர் குணத்தை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். உனக்குத் தானமாகத் தந்த நிலத்தில் இப்புதையல் கிடைத்தபடியால் இது உன்னைச் சேர்ந்ததேயாகும். அம்மா! நீ வறுமைத் தீயினால் வாடி நிற்கின்றாய். ஆதலினால் இதனை நீயே கொண்டுபோய் சுகமாக வாழ்வாய்.

விஜயகுமாரி:— அறநெறிகடவாத அரசர் கோமானே! தங்களிடம் நிலத்தை மட்டுமே வாங்கினேன். இப்புதையல் தங்களுக்கே உரியது. ஆதலினால் இதை நீர் ஏற்றுக்கொள்வதே நியாயம். கருணை கூர்ந்து எடுத்து இதைத் தங்கள் கஜானாவில் சேர்த்தருளும்.

மன்னன்:—குணவதி! உன் உள்ளத்தின் தூய்மை கடலினும் பெரிது. எனது நாட்டில் தங்கள் போன்ற உத்தமிகள் பலர் இருத்தல்வேண்டும். நிலத்தை உமக்குத் தந்தபோதே அதன் உரிமை யாவும் உம்முடையதுதான். ஏழையாகிய தாங்கள் இதைக் கொண்டு சுகமாக ஜீவிக்கலாம். வலிந்து வந்த புதையலை வேண்டாம் என்று மறுப்பார் அகில வுலகிலுமில்லை. ஆகவே மனப்பூர்வமாகச் சொல்லுகின்றேன். இப்பொன் குவியலைக் கொண்டுபோ.

விஜயகுமாரி:—ஏழைகட்கு இரங்கும் ஏந்தலே! நான் மனச்சான்றுக்கு விரோதமாக நடவேன். தங்களிடம் இந்த நிலத்தை மட்டுமே பெற்றேன். புதையலைப் பெற்றேனில்லை.

எனவே இதனை நிச்சயமாக எடுத்துக்கொள்ளமாட்டேன். வறுமையால் வாடினாலும் அறநெறிக்கு மாருக நடக்க மாட்டேன்.

மன்னன்:—தருமநெறி நின்ற தாயே! உன் ஒப்பற்ற உள்ளத்தின் உயர்வு என்னைத் திகைக்கவைக்கின்றது. மங்கையர்களில் நீ மாணிக்க மணி. அம்மா! உன் கருத்தின்படியே நான் பெற்றுக்கொண்டேன். இது என்னுடையதாகவே இருக்கட்டும். எனக்குச் சொந்தமான இப் புதையலை உனக்கு நான் இப்போது தந்தேன். நான் அன்புக்கு அறிகுறியாகத் தந்த இதனை மறுக்காமல் பெற்றுக்கொள். உன் கணவன் எனது தோழன். என் பொருட்டு உயிரைத் தந்தவன். அவன் ஆன்மா சாந்தியடையும் பொருட்டு, இப் பொன்னை நல் வழியில் செலவழிப்பாயாக. இதை ஒப்புக்கொள்ளாமல் இருக்க இனி வழியில்லை. உனக்கு எனது பூரணமான ஆசி. உனது மனம் ஆறுதல் அடைக. என்னால் கொடுக்கப்பட்ட இதைக் கொண்டுபோ.

விஜயகுமாரி மீட்டும் மறுத்துக் கூறமுடியாமல், அரசனுடைய அளவற்ற கருணையை நினைந்து, நெஞ்சம் நெகிழ்ந்து, அப்பொருளைக் கொண்டுபோய் வீட்டில் பாதுகாவல் மிக்க இடத்தில் வைத்தாள், வறுமைக் கவலை யகன்றது.

சில நாள்களுக்குப்பின் சித்தூரை யாளும் மயிந்தனுடைய சேனாதிபதி நோய்வாய்ப்பட்டு மடிந்துவிட்டான். அதனால் அவன் சேனை தளர்ச்சியுற்றது. அத்தருணத்தில் மயிந்தனிடம் "உடனே போருக்குவருக" என்று அறைகூவி தொண்டமானிடமிருந்து ஒரு ஓலை வந்தது. அதைக் கண்ட மயிந்தன் கடுஞ்சினங் கொண்டான், சேனாபதி யின்மையால் மயிந்தன் தானே சேனைகளை நடத்திக்கொண்டு காஞ்சிநகருக்கு வந்தான்.

திடீர் என்று போர்மூண்டதைக் கண்டு தொண்டமான், தனது சேனாதிபதி, உபசேனாதிபதி என்ற இருவரும் இல்லாமைக்கு வருந்தி, தானே நால்வகைச் சேனைகளை நடாத்திக் கொண்டு வந்தார். சிங்கமும் யானையும் எதிர்த்தது போல், தொண்டமானும் மயிந்தனும் எதிர்த்துப் போர்புரிந்தார்கள். எதிர்பாராத வண்ணமாக, ஒரு பெரும் வீரன் தொண்டமானுடைய சேனைகளை நடாத்தி, அரிய பெரிய தீரச் செயல்களைக் காட்டினான். புலிபோல் பாய்ந்து, சக்கரம் போல் சுழன்று, வடவைத் தீபோல் அழன்று போர்புரிந்தான். மயிந்தனுடைய சேனைகள், குடல் சரிந்தும், மார்பு விரிந்தும், உடல் கரிந்தும், இடை நெரிந்தும் மாண்டன. எஞ்சி நின்றவர் புறங்கொடுத்து இரிந்தனர். அந்தச் சமயம் வேங்கைபோல் பாய்ந்து மயிந்தனுடைய கரத்தில் உள்ள வில்லையும், தேர்ப்பாகனையும், தேர்க் குதிரைகளையும் வெட்டி, அவன் மார்பில் வாளால் புண்ணை

யுண்டாக்கி அவனைப்பற்றி, அற்ற வில் நாணியினால் கட்டிச் சிறைப்படுத்தினான். அவனைக் கொண்டுவந்து, தொண்டமானுக்கு முன்னே காணிக்கையாக நிறுத்தி வீரவணக்கஞ் செய்தான்.

தொண்டமான் எதிர்பாராத வகையில் தனக்கு வெற்றி கிடைத்ததற்கு மிகவும் மகிழ்ச்சியுற்றான். அவனைச் சிறையிலடைத்தான். பகைவனைச் சிறைப்படுத்திவந்த வீரர் திலகனை உற்றுநோக்கினான். பார்த்த முகம் போல் இருந்தது. "அப்பா! நீ நீடூழிவாழ்க. உனது போர்த் திறத்தைக் கண்டு நான் அதிசயப்படுகின்றேன். ஆற்றலுடன் அறிவும் உனக்குத் துணை செய்கின்றது. உன் பேர் யாது? எப்போது நீ போர்ப்படையில் சேர்ந்தாய்?" என்று வினவினார்.

அவ்வீரன் தனது பொய் மீசையையும் பொய்த் தாடியையும் எடுத்துவிட்டான். தொண்டைமான் "ஆ! என் அருமை நண்பனே!" என்று அவனைக் கட்டியணைத்தான்.

"வீரசேகரா! நீ மாண்டுவிட்டாய் என்று கருதி கவன்றேன். நீ எவ்வாறு பிழைத்தாய்? இத்தனை நாட்கள் எங்கு தங்கியிருந்தாய்? மாண்டவுயிர் மீண்டதுபோல் வந்தனை. உன்னை எனக்கு மீண்டுந் தந்த தெய்வத்திற்கு வந்தனை. என் உள்ளம் பூரிக்கின்றது; உடல் பாரிக்கின்றது" என்றார்.

வீரசேகரன், "மன்னர் பெருமானே! முன்னே நிகழ்ந்த போரில், முதல் சேனாதிபதி மாண்டு நமது சேனை தளர்ந்தபோது, நமக்குத் தோல்வி வருமென்று கருதி, மாண்டு கிடந்த ஒரு பிணத்திற்கு எனது ஆடைகளைப் புனைந்து, நான் மயிந்தனுடை சேனையின் உடைகளைத் தரித்து, மாறு வேடத்தில் பகைவர் பக்கஞ் சேர்ந்து, பகைமன்னனிடம் இனி போர் நிகழ்ந்தால் தோல்வியுறும் என்று மனதைப் பேதித்து சமாதானஞ் செய்துகொள்ளுமாறு செய்தேன். நான் பின்னர் பகைவருடன் அவர்களில் ஒருவனாகவே இருந்து, அங்குள்ள உளவுகளையறிந்து, மயிந்தனுடைய தளபதி மாண்டதைத் தெரிந்து, தாங்கள் எழுதிய பாவனையில் போர்க்குப் புறப்பட்டு வருமாறு ஒரு கடிதம் நானே எழுதி மயிந்தனிடம் அனுப்பினேன். அவர்கள் படையுடன் நான் வந்து, சந்தர்ப்பமறிந்து, நமது படையில் கலந்து கடும் போர் புரிந்து, பரமன் கருணையாலும் தங்கள் நல்லாசியாலும் வெற்றி கண்டேன். மயிந்தனைச் சிறை செய்தேன். எல்லாம் ஈசன் செயல்" என்றான்.

வீரசேகரனுடைய நுட்பதிட்பம் பொருந்திய செயல்களைக் கேட்டு மன்னன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். "அப்பா! நீயே உண்மைத் துணைவன்; நீயே என் உயிர்த்தோழன், நீயே எனது அதிர்ஷ்ட தேவதை. உனது வீரஞ் செறிந்த புகழ் என்றும் நின்று நிலவுக. உன் மனைவி கிடைத்த புதை

உ

முருகா

அ னு ப வ ம்

(K. S. சுந்தரமூர்த்தி, புவனகிரி)

அறிவாளிகள் பலர் கூடியிருக்கும் மன்றத்தினிடையே ஒருவர் சொற்பொழிவு ஆற்றவேண்டுமானல் அதில் அவருக்கு அனுபவம் இருக்கவேண்டும். தொழில் முறையிலே ஒருவர் பிரவேசிக்க முற்படுமுன் அதை நன்ருக நடத்துவதற்கு வேண்டிய அனுபவம் அவருக்கு வேண்டும். போர் முனையிலே முன் நின்று யுத்தம் செய்யப் புறப்படுவோனுக்கு அதில் நன்ருகப் பயிற்சியுள்ள அனுபவம் அவனிடத்தில் காணப்படவேண்டும். நாடகம் நடிப்போனுக்கு முக்கியமாக இருக்கவேண்டியது அனுபவம். ஒன்றை சொல்லவோ, நடத்தவோ, நடிக்கவோ, கேட்கவோ எதற்கும் அவனிடத்தில்

யலைக் கொணர்ந்து என்பால் சேர்த்து தனது பற்றற்ற தன்மையைக் காட்டிஞள். நீ எல்லையில்லாத வீரப் புதையலாக எனக்குக் கிடைத்தாய். எனது முதல் சேனுதிபதியாக இருந்து மென்மேலும் நாட்டுக்கு நற்பணி புரிந்து நலம்பெற்று வாழ்வாயாக" என்று வாழ்த்தி அவனை மேளதாளத்துடன் வீரயானை மேல் ஏற்றி, வீரகடகம் வீரச்சங்கிலி வீரப்பதக்கம் முதலியவை தந்து ஜெயகோஷத்துடன் அனுப்பிஞன்.

வெற்றிச்சின்னத்துடன், வீரயானை மீது ஊர்ந்து, இந்திரன் மைந்தன் போல வரும் தனது கணவனை விஜயகுமாரி கண்டாள். அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. மாண்டகணவன் மீண்டதைக கண்டு தன கண்ணையே நம்பாது கலங்கிஞள். கனவோ நனவோ என்று ஐயுற்ருள், நன்ருக கண்களை விழித்துவிழித்து உற்றுப்பார்த்தாள். யானையை விட்டிறங்கி வீரசேகரன் தனது வீட்டில் சிங்கம் குகையில் நுழைவது போல் நுழைநதான். தான் மாண்டதாக எண்ணி மனைவி கைம்பெண் விரதம் மேற்கொண்டு துரும்புபோல் இளைத்திருப்பதைக் கண்டு கவன்ருன். கரும்புபோல் அவளைக் கண்டு தழுவிஞன். நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவும் கூறி மகிழ்ந்தான். அவள் கண்களிலிருநது முத்து முத்தாய் உதிரும் நீர்த்துளிகளை மாற்றிஞன். துயரை ஆற்றிஞன். மகிழ்ச்சிப் பீடத்தில் ஏற்றிஞன். கணவனைக் கண்ட களிப்பிஞல் அவள் உடல் பூரித்தது. அக்கற்பரசிக்கு உண்டான மகிழ்ச்சியை எந்த எழுத்தால் எழுதுவது? எழுத்துக்குஞ் சொல்லுக்கும் அது அடங்குமோ?

வீரசேகரனுடன் விஜயகுமாரி தணியாக் காதலுடன் பணியாபரணனைப் பரவி பணிவுடன் பரமதிருப்தியோடு வாழ்ந்தாள்.

அனுபவம் இருத்தல்வேண்டும். அனுபவமில்லாமல் ஒருவன் சொல்லும் வார்த்தையோ அன்றி நடைமுறையிலே காட்டும் வழியோ ஒருபோதும் பயன் தரமாட்டாது. அனுபவம் நிறைந்த வழிதான் மக்களுக்கு என்றும் பயன் தருவதாகும். அனுபவமில்லாததொன்று கூடிய விரைவில் அழிந்து போகும். அனுபவத்தில் காணப்படும் இன்பம்போல் எதிலும் நமக்கு அவ்வளவாக இன்பம் தரமாட்டாது. எத்தகைய வழியில் பிரவேசிப்போனுக்கும் அனுபவம் கண்டிப்பாக இருந்தே தீரவேண்டும். அனுபவமில்லாமல் பிரவேசிக்கும் எத்தகைய வழியும் வீணான மனக்கஷ்டத்தையும், நஷ்டத்தையும் முடிவில் கொடுத்தே தீரும். எழுதத்தெரியாத ஒருவன் கையில் பேனாவையும், தாளையும், கொடுத்து எழுது என்றால் அவனால் அதைச் செய்ய முடியாது. அதுபோல், அவன் நம்மிடம் கடப்பாரையை கையில் கொடுத்து ஒரு அடி சதுரத்திற்கு ஒரு குழி வெட்டு என்று சொல்லுவானேல் அதை நம்மால் செய்யமுடியாது. நாம் சொல்லுவது நமக்கு எளிதாகத்தான் தோன்றும். இதுபோன்று ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் சொல்வது அவரவர்களுக்கு எளிதாகத்தான் தோன்றும். நடைமுறையில் தான் செய்வதுபோல் மற்றொருவன் செய்யவில்லையானால் அவனால் செய்ய முடியவில்லை என்று நினைத்தல் தவறு. அதில் அவனுக்கு அனுபவம் இல்லை யென்றுதான் நினைத்தல்வேண்டும். அபபடியானால் அனுபவ நிறைவில்லாத நாம் செய்யவேண்டியது என்னவென்று யோசித்துப் பார்ப்போம், அனுபவம் நிறைந்தவரிடையே சென்று நாம் கருதக்கூடிய, நடத்த எண்ணிய தொன்றைப் பற்றி ஆய்ந்தறிந்து நன்றாகதெளிந்தவுடன்தான் ஒரு துறையில் நாம் பிரவேசிக்கவேண்டும்.

சாதாரணமாக, உலகில் நாம் பொருளைச் சம்பாதிக்கப் பல துறையிலும் அனுபவப்பட்ட பெரியவர்களை அடுத்து அவர்களிடம் நாம் நினைத்திருப்பதைக் கூறி அதற்கு அவர்கள் கூறும் யோசனைகளைக்கேட்டு நன்றாக உணர்ந்த பிறகுதான் தொழிலிலோ அன்றி வேறொன்றிலோ பிரவேசிக்க முற்படுகிறோம். நமது அனுபவத்திற்குத் தக்கவாறு பலனை முடிவில் அடைந்தும் விடுகிறோம். பொருளைச் சேகரித்து தனனுடைய மனைவிக்கும், மக்களுக்கும், தன்வயிற்றுக்கும் அடைத்து வாழ்வதற்கே இவ்வளவு சிரமம்தான் அடைகிறோம் என்று சொல்ல முடியாது. ஒரு சாண் வயிற்றுக்கு நம்மால் பதில் சொல்லமுடியாமல் எங்கெல்லாமோ தேடித்திரிந்து பணத்தைச் சேகரித்து அதனால் வரும் பாவ மூட்டையையும் பெற்றுக் கொண்டு முடிவில் வீணான முறையில் இறந்தும் விடுகிறோம். உடலுக்கு உறுதி தேடிய நாம் உயிருக்கு உறுதிதேட முற்படாது போனதுதான் மடமை. உயிருக்கு உறுதிதேடி

நில்லாமல், பொருளுக்கும், பெண்ணுக்கும், மண்ணுக்குமாக இவ்வுடலை உபயோகப் பொருளாக்கி வீணே உழைத்து உழைத்து உள்ளம் நொந்து உருமாறிப்போய் முடிவில் அழிந்துபோகிறோம். பொருள் தேட அனுபவம் பெற்ற பெரியார்களிடம் சென்று அவர்கள் கூறும் யோசனையை அறிந்து பொருளைச் சேகரித்த நாம், அருளைச் சேகரிக்க என்றாவது முயற்சி எடுத்தோமா? உடலுக்காக நாள் பூராவும் உழைத்து உறுதி தேடிய நாம், உயிருக்கு ஒருமணி நேரமாவது உறுதி தேட முயற்சி எடுத்தோமா? அருளுக்கு அனுபவம் பெற்றவர் கூறும் வார்த்தையை செவியில் கொஞ்சமாவது வாங்கி அதன்படி நடக்கவோ, நினைக்கக்கூடவோ முயற்சி செய்யாமல் வாழ்கிறோம்.

உலகம் அறியாத சிறுவயதில் நம்மை ஆசிரியரிடம் ஒப்படைத்து அறிவைப் புகட்டச் செய்கின்றார்கள் தாய் தந்தையர் அவ்வாசிரியனும் தமக்குத் தெரிந்தவற்றைக் கூறுவதைக் கண்டு, அதில் ஏதாவது நமக்கு விளங்கவில்லையானால் தெளிவாக விளக்குமாறு அவரை கேள்விகேட்டு,பொருளை உணர்ந்து விடுகிறோம். இவ்வாசிரியரிடம் நாம் கற்ற பொருள் முடிவில் நம்மிடையே நிற்கவில்லை. இறக்கும்போது மங்கி மறைந்து விடுகிறது. உணர்வு அழிந்துவிடுகிறது. கடைசிவரையில் நம்மிடத்தில் இருந்து வந்த இக்கல்வி அறிவு முடிவில் மறைந்து விடுகிறது. ஆதலின் இது உண்மைப் பொருள் அல்லவென்று தெளிவாக நமக்குத் தெரிய வருகிறது. நமக்கு கடைசி நாளில் உபயோகப்படாத இக்கல்வி அறிவைக் கொண்டு உபயோகப்படக்கூடிய உண்மைப் பொருளை அறிபவனே அறிவாளி. இதை நன்றாக அறிந்து உண்மை அறிவை (அதாவது) அனுபவத்தை அடையவேண்டுமாதலின் முடிவில் அழியக்கூடிய இப் பொய் அனுபவத்தைக் கொண்டு நித்தியப் பொருளான பிரமத்தை அடைய அனுபவத்தை வளர்க்க வேண்டும். அநித்தியப் பொருளின்மீதுள்ள விருப்பத்தை விட்டு நித்தியப் பொருளான பிரமத்தை அடைய விருப்பம் கொள்ளவேண்டும். உண்மை அனுபவத்தை அடைய முதலில் மனிதனுக்கு "வைராக்கியம்" என்ற தந்தையானவன் துணை இருக்க வேண்டும் வைராக்கியம் எவனிடத்தில் இல்லையோ அவனால் ஒன்றையும் பெறமுடியாது. "சாதனையின்றியொன்றை சாதிபபாருலகிலில்லை" என்பது ஆன்றோரின் வாக்கு. வைராக்கியம் அவசியம் ஒருவனுக்கு இருந்தால்தான் அவனால் எடுத்த காரியத்தைச் சாதிக்க இயலும். ஆகையால் முதலில் மனிதர் வைராக்கியத்தைப் பெறல் வேண்டும். வைராக்கியமென்ற தந்தையை அடைந்த ஒருவனுக்கு அனுபவம் கிடைத்தேதீரும்.

வைராக்கியம் என்ற தந்தையைத் துணைகொண்டு ஞானாசிரியனைத் தேடவேண்டும். ஞானாசிரியனென்றால் அனுபவம்

உ

முருகா

முகிலார்தி

(௧௫௪௫-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்படலும் அவளது உடலின் எழில் நலங்களைக் கண்ணுற்றுப் பெரிதுங் காமுற்றுத் தன்னை யயர்ந்திருந்தனன். அழலிடைப்பட்ட மெழுகது போல் அவனுள்ளங் கரைதலைக் கண்ணுற்றானோ இல்லையோ, (15) கிளர்ந்தனன் உருவிலி. களனுங் காலமுங் கண்டால் கடப்பானோ காமன்? ஏறினன் (16) கிள்ளைக்துரகதம்; எடுத்தான் (17) கன்னற் கொக்கரை; ஏற்றினன் (18) சுரும்பர்நாண்; நுழைத்தான் கையை (19) ஆவத்தினுள்; வந்தன முளரியும், அசோகும்; எய்தனன் டண் டண்ணென்று. எய்யப்பட்ட (20) ஏவுகள் முறையே உள்ளத்திலுங் கண்களிலும் பதியவே, ஆக்நீத்ரன் தனா துள்ளமுடைந்து, (21) கன்னல் வில்லிக் கணையத்திற் களைத்துப் பூர்வஸித்தியை யண்மி, (22) ஆக முருக்கும் அமுத மொழிகளான் முகமன் மொழிந்து தன்னை மணக்குமாறு குறையிரந்து நின்றான். பூர்வஸித்தியும், ஆக்நீத்ரனது ஆகத்தெழிலையும், முழுமதி முகக்கு முகத்தழகையும். மங்கையர் மனத்தை மலர்விக்கு மலையைமானுந் தடந்தோட் கவினையுங் கண்களாற் பருகி யுள

பெற்றவனாகத்தானே இருத்தல் வேண்டும். அப்படி அவனிடத்தில் அனுபவம் இருப்பதை எப்படி நாம் அறிய முடியும்? தோற்றத்தைக் கண்டு முடிவு கட்ட முடியுமா? எல்லாப் பற்றையும் விட்டு, வேற்றறிவு உள்ளத்தில் எழாமல், திரையற்ற நீர் போல உள்ளந் தெளிந்த பெரியோராகிய மெய்ஞானம் அடையப் பெற்றவர்களே, தான் தரிசித்த, பெற்ற அனுபவத்தை பெறவில்லை, அனுபவமில்லையென்று கூறும்போது அவர் எப்படி உனக்கு அனுபவத்தைச் சொல்லமுடியும். ஞானாசிரியனைத் தேட நினைக்கும் நம்மிடத்தில் அனுபவம் பெற்ற ஒருவரை ஒருவாறு அறிவிக்கிறது ஒன்று. திருஷ்டாந்தத்தை அறிந்தவனுக்குத்தானே தார்ஷ்டாந்தத்தின் உண்மை ஒருகாலத்தில் தெரியவரும். திருஷ்டாந்தத்தையே மறந்த நமக்கு தார்ஷ்டாந்தத்தைச் சொன்னால் எப்படித் தெரியவரும். அத் திருஷ்டாந்தத்தை மறந்த நமக்கு ஞாபகப்படுத்துவோனே ஞானாசிரியன்.

(தொடரும்)

---

15. உத்ஸாகங் கொண்டான் மன்மதன். 16. கிளியாகிய குதிரை. 17. கரும்பாலாகிய வில், 18. வண்டுகளாலாகிய கயிறு, 19. அம்புறாப் பொதியில், 20. அம்புகள், 21. கரும்பை வில்லாகவுடைய மன்மதனது போரில், 22. நெஞ்சை யிளகச்செய்யும்.

மூவந்து காமுற்றனளாயினும், அவள துள்ளமெனும் (1) விளாகத்தில் (2) விழைவும் வெட்கமும் இகலிப் புரிந்த வெஞ்சமரில் முன்னதே வென்றமையான், (3) உவகை யுந்திய வுள்ளத்தினளாய், ஆக்நீத்ரனை யிறுகப் புல்லி, "ஏந்தால்! என துள்ளங் கவர்கள்வ! நின் விழைவை(4) விழலாக்குவளோ இவ் வெளியள். எளியள் நினது படிவம் படிந்த நிழலும், நின் குரலொலி பயந்த வெதிரொலியும், நினது காமக் கயிற்றிற் (5) கறங்கிய கறங்குமாவேன்" என்று (6) நறுங்காவி நல்கிய நறவம்போனவின்றனள். (7) நங்கை நவின்ற நறவமாந்திய (8) நம்பியும் இரும்பொரு ளெதிர்ந்த (9) இலம்பாட்டா ரென்னக் களிபேருவகை யெய்தி, (10) 'திருமருவுஞ் செவ்வி யெதிர்ந்தக்கா லஃதைச் சிதறவிடுதல் செவ்விதன்' றெனவுன்னி, கதுமென அன்னாளைக் (11) கை கதுவித் தீ வேட்டனன். தீ வேட்ட தெரிவையொடு (12) தெருமால் தெரியாது அளப்பருங்காலம் (13) அருத்திசா லின்பந் தெவிட்டாது திளைத்துத் திகழ்ந்திருந்தனன். நீடிய வின்பநெடுநா ளுகர்ந்து, இறுதிக் கண் ஆண்டிற் கொவ்வொருவராக நாபி, கிம்புருஷ, ஹரி, இளாவ்ருத, ரம்யக, ஹிரண்மய, குரு, பத்ராச்வ, கேதுமால ரெனப் பெயரிய மக்கள் ஒன்பதின்மரைப் பூர்வஸித்திபாற் பயந்தனன். அவ் வொன்பதின்மரும் இந் நாவலந் தீவை ஒன்பது கூறாக்கித் தத்தம் பெயரால் வர்ஷங்களாகச் செய்து ஆண்டு வந்தனர். (இவ் வொன்பது வர்ஷங்களே முன்னர், முகில் 1, புயல் 6. ஆகிய நாவலந்தீவு என்ற பூவுலகப் பகுதியின் கண் நவ வர்ஷங்களாகக் கூறப்பட்டுள்ளன) நாபி முதலிய வொன்பதின்மரும் முறையே மேருகிரியின் புதல்வியர்களாகிய மேருதேவி, ப்ரதிரூபை, உக்ரதம்ஷ்ட்ரை, லதை, ரம்யை, ச்யாமை, நாரி, பத்ரை, தேவீ யெனப் பெயரிய வொன்பது மகளிரை மணந்து வாழ்ந்துவந்தனர். இப்புதல்வர்கள் ஒன்பதின்மருள் மூத்தோனாகிய நாபி யென்பவன் மகப்பேற்றைக் கருதித் திருமாலை நோக்கித், தன தில்லக்கிழத்தி மேருதேவியோடும் அரும் பெரும் வேள்வி யொன்று வேட்டனன். பைந்துழாய் மார்பன் பரிந்து வந்து, காட்சி யீந்து வேண்டிய விருப்பமென்னென வினவினன். உசாவலும் "உன்னைப்போலு நன்னயம் வாய்ந்த புதல்வனை யின்னருள் புரியவேண்டும்" என நாபி யென்பவன் நயந்துவேண்டினன். அரவணைச் செல்வனும் அகமகிழ்ந்து "யானே நினக்குப் புதல்வனாய்த் தோன்றுவல்" என்றருள் சுரந்து, நாபியி (14) னில்லக்கிழத்தி யகட்டுட் கருவுருக்

---

1 போர்க்களத்தில். 2 ஆசையும். 3 ஆசையால் தூண்டப் பெற்ற. 4 வீணாக்குவளோ. 5 சுழன்ற பம்பரமாவேன். 6 வாசனைபொருந்திய செங்கழுநீர். 7 பெண்களிற் சிறந்தவள். 8 ஆண்மக்களுட் சிறந்தவன். 9 வறுமையாளர். 10 செல்வஞ் சேருங் காலம் நேர்ந்தபோது. 11 கைப் பிடித்து. (பாணிக்ரஹணஞ் செய்து). 12 துன்பம். 13 அன்பு நிறைந்த. 14 மனைவி.

கொண்டு வளர்ந்து பிறந்தான். நாபி அவ்வருமந்த குழவியின் வெண்ணிற முதலிய நற்குணங்களைக் கண்ணுற் றுளமகிழ்ந்து தன் மகற்கு "ருஷபன்" எனப் பெயரிட்டு வளர்த்துவந்தான். அவ்ருஷபன் ஆழிப்படையோனவதாரமாகலின், கலைகளனைத்தையும் ஓதாதுணர்ந்து விறல் வீரனாய் விளங்குவதைக் கண்டு உலகச் சுமையை ருஷபனது திண்ணிய தோளிற் சுமத்தி, நாபி யுயிர் வீடு பேறடையு நெறிப்பட்டொழுகிப் பேரின்ப மெய்தினன்.

ருஷப னரசாட்சி

ருஷபன் என்பான் விண்ணவர்கோன் பெற்ற ஜயந்தி யென்ற மடவாரை மணந்து அவண் மாட்டுப் "பரதன்" முதலிய நூற்றுவரைப் பயந்தான். இந் நூற்றுவருள் மூத்தோனாகிய பரதன் என்பானுக்கு இப்பாரைக் கொடுத்து முடி சூட்டி, அரசாளச் செய்வித்து, உலகத்தார்க்குக் கடவுண்மாட்டன்பு, மெய்யறிவு, மனமொழி மெய்களின் றூய்மை, மனவுறுதி, ஐம் பொறிகளை யடக்கியாளுமாற்றல், உலகப்பற் 1 றொரூஉதன் முதலிய விலக்கணங்களைப் புகட்டி 2 இல்லத் துறவியா யில்லத் தின்கண்ணே வைகி, குருடு, செவிடு, பேடு, பித்தனாகி வாய் பேசாது, ஊன் மருவிய வுடலைத் தவிர வேனைய அரைஞாண், கோவண முதலியவற்றைக் களைந்தெறிந்து, திருமேனி புழுதி யாட நிலத்தின்கட் புரண்டு கிடப்பன். 3 உற்றுணர் வற்ற கட்டைபோன்றியாது முணராது கால்வேறு, கைவேறு, உடல் வேறுபட்டு யோகு செய்து கிடப்பன்.

ருஷபன் மகார் நூற்றுவருள் மூத்தவனான பரதன் முடி சூடி, நடுநிலை சிதையாது செங்கோலோச்சி வருநாளில் விச்வ ரூபனது மகளாகிய பஞ்சஜனி யென்பாளை மணந்து, அவள் பால் அஹங்காரத்தின்கண் பஞ்ச தன்மாத்திரைகள் பிறந் தன்ன சுமதி, ராஷ்ட்ரபுக், ஸுதர்சநன், ஆசரணன், தூம்ர கேது எனப் பெயரிய வைந்து புதல்வர்களைப் பெற்றனன். அப் புதல்வர்கள் மொய்ம்புமிக்குடையரா யொளிர்வதைக் கண் ணுற்று அவர்கண்மாட் டரசுரிமையைச் சுமத்தித் தானுந் துறவியாய்த் திகழ்ந்தனன். இந்தப் பரதன் அரசாண்டதால் இந் நாட்டிற்குப் பாரத வர்ஷம் என்ற பெயர் வந்தது. இந்தப் பரதனையே ஜடபரதன் என்றுன்றோர் கூறுப.

நவகண்டங்கள்

இப் பாரதவர்ஷம் இந்த்ரகண்டம், கசேருக் கண்டம், தாம்ரவர்ணிக்கண்டம, கபஸ்திக்கண்டம், நாககண்டம், சாந்த்ரமத்கண்டம், காந்தர்வக் கண்டம், வாருணக் கண்டம்,

---

1. அற வொழித்தல். 2. மனையிலிருந்தே பற்றற்று விளங்கும் ஸன் யாசி. 3. ஊறுபாடுணருந்தன்மை யற வொழிந்த.

குமரிக் கண்டம் என்னும் பரதக்கண்டம் எனவொன்பது கண்டங்களாகப் பகுக்கப்பட்டுப் பற்பல மலைகளும், பல்சான்ற யாறுகளும், பல்வேறு வகைப்பட்ட சாதிகளு முடைத்தாய் வயங்கா நிற்கும்.

இக்கண்டங்கள் ஒன்பானுள் பரதக்கண்ட மொன்றே வேதாகம வழக்கும், ஜாதிவரம்பும், கங்கை காவிரி முதலிய (1) கடவுண்மா யாறுகளும் காசி இராமேச்வர முதலிய புண்ணியஸ்தலங்களும், தீர்த்தம், மூர்த்தி, க்ஷேத்திர முதலாய சிவ வடிவங்கள், திருமால் கோவில் கொண்டருளி யிருக்குந் திருப்பதிகள் பலவுந் திகழ்வதாகிச் சாலச்சிறந்ததாகும். (2) பலவுடம் பழித்துப் பழியூனயிலாப் பரமசைவர்கள் வாழ்வதும் இப் பரதகண்டமேயாம். ஏனைய எட்டுக் கண்டங்களும் மிலேச்சர் வாழிடங்களாம்.

பரதக்கண்டம் என்னுங் குமரிக் கண்டம்

மற்றை யெட்டுக் கண்டங்களைப் பார்க்கிலும் இப் பரதக் கண்டமே 'தென்னா டுடைய சிவனே போற்றி' என மணிவாசகப் பெருமானார் திருவாய் மலர்ந்தருளிய வண்ணம் உயிர்கள் வழிபட் டுய்வான் பலவிடங்களிலுஞ் சிவபெருமான் றிருக்கோவில் கொண்டருளி யிருத்தலானும், கங்கை, காவிரி முதலிய கடவுண் மாயாறுகள் பாயப்பெற்றிருத்தலினாலும், (3)மூவெயிற் பொடித்த முழுமுதற்கடவுளாகிய முக்கட் பெருமானது திருவாயாற் (4) குறுமுனிக்கு வலியுறுத்தப்பட்டுப் பிறநாட்டு மொழிகளைத் தனாதகட்டுட் கருக்கொண்டு பயந்துந் தனதிளநலங் குன்றாதெழில்பெற்றுத் திகழ்வதும், பேச்சு வழக்கற்றிறந்துபட்ட பிறமொழிகள் போலாது, பேச்சுவழக்கினும், ஏட்டு வழக்கினுஞ் சிறந்தோங்குவதுமான தீஞ்சுவை விஞ்சுந் தெய்வமொழியாகிய தமிழ்த் தொன்மொழி யுருவு கெழுமினதினாலும், தலை, இடை, கடை யென்ற முத்தமிழ் மன்றங்களினும் திரிபுர மெரித்த விரிசடைக் கடவுள் தமிழ்ப் புலவராய்த் தோன்றித் தமிழ் மொழியை வளர்த்த தகைமையானும், குன்றை வில்லியை நிகர்க்குங் குறுமுனியாகிய தமிழ் முனிவர் தமிழணங்கிற் (5) கணிகலன் புனைந்து வளர்த்துத் தமிழ்க் குரவராய்த் தலை சிறந்தமையினாலும், பலவுடம் பழித்துப் பழியூனயிலாப் பண்பார்ந்த சைவ வேளாளர்கள் (6) அந்தணாளராய் வருவிருந்தோம்பி வதிதற்குறைவிடமா யிருத்தலானும்

---

1. தெய்வத்தன்மை பொருந்திய நதிகள். 2. பலவுயிர்களைக் கொன்று பாவத்தொடு கூடிய வூனைத் தின்னாது மேலான சைவர்கள். 3. முப்புரங்களை யெரித்த. 4. குறுகிய வுருவங்கொண்ட அகத்தியர். 5. ஆபரணங்கள். 6. உயிர்களிடத்து அழகிய குளிர்ந்த அன்புடையவராய்.

இம் மண்ணுலகந் தோன்றிய காலை இத் தென்னாட்டின் கண்ணே முதன் முதன் மக்கட்டொகுதி தோன்றினமையினாலும், மக்கள் பேசத் தொடங்கிய போழ்து தமிழ்மொழியே ஒலிவடிவிலும், வரிவடிவிலுஞ் சிறந்து வழங்கப்பெற்றமையினாலும், இவ் விந்திய நாடே எந்நாட்டினும் நன்னாடாகச் சீருஞ் சிறப்பு மிக்குத் திகழ்வதாகும். பண்டையிற் றமிழ் மக்களே செழித்து வாழ்ந்துவந்த குமரிக் கண்டமாகிய இவ் விந்திய நாட்டின் சீருஞ் செல்வமு நிறைந்த செழிப்பையுங், கல்வியறிவு, நல்லொழுக்கம், வண்மை முதலிய சீர்மையையுங் கண்டன்றோ, மத்ய ஆசியாவில் வதிந்த ஆரியர் முதல் அயல்நாட்டா ரொவ்வொருவரும் உனக்கு முந்தி யானெனத் தத்தங் கால்களுக் கறிவூட்டி, யோடோடியும் வந்து குடியேறிச் சிறப்புற்றனர். இவ்வுண்மையை (1) நாட்டினடை வரைகுநர் நன்கு வரைந்துளார். இஃதேயன்றி, (2) எண்ணூல், (3) எழுத்துநூல், (4) பொருணூல், (5) இசை நூல், (6) கூத்து நூல், (7 இன்ப நூல், (8) வானூல், (9) ஒளி நூல், (10) ஓவிய நூல், (11) உயிர் நூல், (12) உடனூல், (13) உள நூல், (14) ஒழுக்க நூல், (15)நடுநூல், (16)அற நூல், (17) அறிவு நூல், (18) மருத்து நூல், போர் நூல், பேரின்பம் புகுத்தும் பெரு நூல் முதலிய நூல்வகைகளும், கைத்தொழில், வாணிபம், உழவு, கடற்செலவு, இசைக் கருவியினியக்க முதலிய கலைகளனைத்தும் இவ் விந்திய நாட்டின் கண்ணே உருவு கெழுமி மேனாடு முதலிய வெளிநாடுக ளனைத்தினுஞ் சென்று அவ்வந் நாட்டினரைச் சீர்மைப் படுத்தின. இன்னும், திருமாலி னவதாரங்கள் பத்தினுள் மத்ஸ்யாவதாரம், பரசுராமாவதாரம், ரகுராமாவதாரம, பலராமாவதாரம், க்ருஷ்ணாவதாரங்களாகிய வைந்தவதாரங்க ளெடுத்தற் கிடனாயதும், (19) கதிரவ, மதி குலத் தரசர்களும், விதேக நாட்டரசர்களும், கண்ணபிரானு மரசு புரிந்த அயோத்தி, ஹஸ்திநாபுரி, மிதிலை, துவாரகைகளைத் தலை நகரங்களாக் கொண்ட கோசல முதலிய நாடுகட் கிடனாயதும், அயோத்யா, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்திகா, த்வாரவதி யென்ற முக்திஸ்தலங்க ளேழினாற் றூய்மையானதும், அரிச்சந்திரன், நளன், புருகுத்ஸன், புரூரவன், ஸகரன், கார்த்தவீர்யார்ஜுநனாகிய சக்ரவர்த்திகளா

---

1. தேசச் சரித்திரம். 2. கணித சாஸ்த்ரம். 3. வியாகரண சாஸ்த்ரம். 4. அர்த்த சாஸ்த்ரம். (பொருளீட்டு நூல்) 5. சங்கீத சாஸ்த்ரம். 6. பரத சாஸ்த்ரம். 7. ச்ருங்கார சாஸ்த்ரம். 8. ககோள சாஸ்த்ரம். (வான சாஸ்த்ரம்) 9. ஜ்யோதிஷ சாஸ்த்ரம், 10. சிற்ப சாஸ்த்ரம். 11. உயிர்தத்துவ சாஸ்த்ரம். 12. உடற்றத்துவசாஸ்த்ரம். 13. மநோதத்வ சாஸ்த்ரம். 14 .ஆசாரநீதி சாஸ்த்ரம். 15. ஞாய சாஸ்த்ரம். 16. தர்ம சாஸ்த்ரம். 17. ஞாந சாஸ்த்ரம். 18. வைத்ய சாஸ்த்ரம். 19. சூர்ய சந்த்ர மரபிற்றோன்றியமன்னர்களும்.

லும் 'தன்னகம் புக்க குறுநடைப் புறவின் றபுதிகண்டஞ்சித் துலைபுக்கோ' ணுகிய சிபி மன்மன்னன், மாந்தாதா முதலிய கடவுட்டன்மை யுடைய மன்னர்களாலு மரசாளப் பெற்றதும், சைவ முதலிய வகைச் சமயங்களும், வேதாகம வழக்கும், தவ முதலிய (1) வறுநோன்புகளும், வேள்வி முதலிய நல் வினைகளும், கடவுள் வழிபாடுகளும், முப்பத்திரண் டறங்களும் (2) எழு வகைப் பட்ட நிலை யறங்களும் நிலவுதற் கிடனுயதும் இவ் விந்திய நாடாகிய குமரிக்கண்டமேயாம். ஏனை பன்னலங்களை விதந்து கூறுதற்கிது இடனன்ருதலின், விரிக்கின் நயப்பில நவின்ற (3) நவையின் பாற்படும். பிற நூல்களா னறியற் பாலன.

சிமயம்

இத்தகு பெற்றி வாய்ந்த நம்மிந்திய நாட்டிற் கிஞ்சி யரணேய்ப்பதோர் வடவெல்லையா யமைந்துளது ஒப்புயர்வற்ற பனிவரையேயாம். இச் சிமயப் பொருப்பே உலகிலுள்ள மலைகட் கெல்லா மன்னனு மாண்புடைத்து. தோடுடைய செவியற்குத் தோன்ருத் துணையாயிடக் கூறுபெற்ற மலைமகட்குத் தந்தையாந் தகைமை சான்றது. மதிமுடிப் பெம்மான் மணவினைக்கு மண வறையானது. சூரபன்மனைத் தடிந்து, உம்பர் குழாங்கட்கின்ப மளித்த முருகவேள் உருவு கெழும வுறையுளாயது. பல்கோடி பண்ணவர், விச்சாதரர் முதலிய பண்ணவரினங்கள், முனிவர் முதலாயினேர்க் குறைவிடமானது. சிவபெருமான் தன் சிற் சக்தியோடெழுந்தருளி யிருக்குங் கைலை மலையைத் தனது நாப்பணமையப் பெற்றுளது. இன்னும், பண்டைக் காலத்திற் பார்மகளொரு போதாவுருவாகிப் பல்லார்க்கும் பற்பல நன்மை களைப் பயந்த காலையில் மநு முதலியோரது வேண்டுகோட் கிணங்கி, யவ்வாவினிடத்திருந்து மக்கட்குணவுப் பொருள், (4) மருத்துப் பொருண் முதலிய பெறும பாக்கு நல்லாவி (5) ணுகாயவந்து சுவைத்து மடுசுரக்கச் செய்ததும் இம்மலை யரசனேயாம். கங்கை, யமுனை, சிந்து, ப்ரஹ்மபுத்ரா என்னும் யாறுகட்குத் தாயகமாயது.

(தொடரும்.)

---

1. சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணுபத்யம், ஸௌரம், காபாலம் என்பன அறுவகைச்சமயங்களாகும். 2. (1) கோவிலெடுத்தல், (2) குளந் தோண்டுதல், (3) காடு வளர்த்தல், (4) காப்பியமியற்றல், (5) புதையல் வைத்தல், (6) புதல்வரைப் பெறுதல், (7) பார்ப்பனச் சேரியமைத்தல் ஆகிய இவ்வேழும் ஸப்த ஸந்தானங்களாகும். 3. குற்றத்தின் பாற் படும்.

4. மருந்துப் பண்டங்கள். அதாவது பச்சிலை மூலிகைகள்.

5. நாகாய் – ஆவின் இளங்கன்ருய்.

நமது புத்தகசாலை

ஒவ்வொரு ஆண்டும் வெளிவந்த பன்னிரு புத்தகங்களையும் ஒன்றாகச் சேர்த்துக் கட்டியது.

		விலை.	தபாற்செலவு
1	விய பதினோராவது ,,	2–12–0	0–8–0
2	சர்வசித்து பன்னிரண்டாவது ,,	3– 0–0	0–9–0
3	சர்வதாரி பதின்மூன்றாவது ,,	3– 0–0	0–9–0
4	விரோதி பதினான்காவது ,,	3– 0–0	0–9–0
5	விக்ருதி பதினைந்தாவது ,,	3– 4–0	0–9–0

மற்ற ஆண்டுப் புத்தகங்கள் கிடைக்காது.

	விலை.	தபாற்செலவு
சத்தியஞானசபைத் தூபி நீராட்டுவிழா நினைவு மலர்	0-12-0	0-5-0
கந்தரலங்காரம் (உரையுடன்) சுமார் 400 பக்கங்கள் கொண்டது.	3- 0-0	0-8-0
திருப்புகழ்த் திரட்டு (திருப்புகழ் 246ம், திருவகுப்பு முதலியனவும் அடங்கியது)	2- 0-0	0-7-0
திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்	0- 8-0	0-5-0
மணிமொழிகள் (60)	0- 4-0	0-5-6
காந்தி மகான் வாழ்க்கை (வேலூர் திரு. மு. பெருமாள் எழுதியது)	0-12-0	0-6-0
வழிகாட்டி (கி. வா. ஜ.)	2-8-0	0-7-0
சுப்பிரமணிய சகச்சிரநாமம் (தமிழ்)	0-12-0	0-6-0

கடிதம் எழுதும் முறை

திருப்புகழமிர்தம், வெளியீடுகள், சம்பந்தமான கடிதங்களையும் மற்றவைகளையும், "மானேஜர், திருப்புகழமிர்தம் காரியாலயம்" என்று விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும். ஆசிரியர் பெயர் குறித்தோ அல்லது, திருப்புகழமிர்தம் அச்சகம் (பிரஸ்) என்று குறித்தோ அனுப்பக் கூடாது. ஆசிரியர் பெயர் குறித்தும், பிரஸ் என்று குறித்தும் அனுப்பப்படும் கடிதம் முதலியவற்றுக்குப் பதில் கிடைக்க தாமதப்படும்.

முருகா

'முருகா' என்ற எழுத்துக்கள் பொறித்த எனுமல் போர்டுகள் 9" X 3" அளவில் தயாராகியுள்ளன. ஒவ்வொருவர் வீட்டுவாயில் முகப்பிலும் அழகு செய்யுமாறு முருகன் அடியார்கள் விரும்பியவண்ணம் செய்யப்பட்டது. விலை போர்டு 1-க்கு ரூ 0—12—0; தபாற்செலவு 0-6-3. வேண்டுவோர் (தபால் செலவுடன்) 1—2—0 மணியார்டர் அனுப்பவும். 6 போர்டுகளுக்கு தபால்செலவு 1-0-0. சிலோன் அன்பர்கட்குமட்டும் V. P. மூலம் அனுப்பப்படும். வேண்டுவோர் எழுதவும்.

மானேஜர், திருப்புகழமிர்தம்.

கருர் விலை என்பதே நம்பிக்கை

விசேஷகாலங்களுக்கும் கலியாணங்களுக்கும்

பனாரஸ், சேலம், பெங்களூர், கோயமுத்தூர், காஞ்சீபுரம், மதுரை

பட்டு & நூல் ஜவுளி தினுசுகள்

ஏராளமாக வரவழைத்திருக்கிறோம். தவறாது விஜயம் செய்யுங்கள்

ஜெ. மு. சாமி

கீழமாசி வீதி, (பெரிய விளக்குத்தூண் சமீபம்) மதுரை.

Head Office:
வடக்கு மாதுளம் கோல்லித்தெரு, உறையூர், திருச்சி

Branch:
கடை வீதி, நாகப்பட்டினம்

Printed & Published by M. Madhusoodana Sivam at the Thiruppugal Amirth. Press, 144 Swaminaicken Street, Chintadripet, Madras.
Editor: Sri Kirupanandavari.